கல்வி அமைச்சகம்

MINISTRY OF EDUCATION

सत्यमेव जयते



# தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் (*NPST*)

**Tamil - தமிழ்**

***NPST* வழிகாட்டு ஆவணம், 2023**

## பத்தி எண் *5.20*, தேசியக் கல்விக் கொள்கை (*NEP*) *2020*

*“தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், (NCERT), மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், (SCERTs), வெவ்வேறு பணிநிலைகளிலும் பகுதிகளிலும் உள்ள ஆசிரியர்கள், ஆசிரியர்களின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் வல்லமை பெற்ற நிறுவனங்கள், தொழில்முறை கல்வியில் வல்லமைபெற்ற குழுக்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து, பொதுக் கல்வியியல் கழகத்தின் – (GEC) கீழுள்ள பணித்தகுதித் தரநிலை நிர்ணய அமைப்புக்குழுவாக - (PSSB), தேசிய ஆசிரியர் பணித்தகுதிக்கான தரநிலைகள் குறித்த பொது வழிகாட்டல் ஒன்று, மறுகட்டமைக்கப்பட்ட புதுவடிவத்தில், தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்தால் 2022 வாக்கில் வளர்த்தெடுக்கப்படும். இந்தத் தரநிலைகள், வெவ்வேறு வல்லமை படிநிலை தளங்களில் உள்ள ஆசிரியரின் பங்கையும் அந்தந்த நிலைகளுக்கு தேவையான திறன்களையும் குறித்த எதிர்ப்பார்ப்புகளை உள்ளடக்கியதாக இருக்கும். மேலும், குறிப்பிட்ட கால அடிப்படையில் நிகழும் ஒவ்வொரு நிலைக்குமான செயல்பாடுகளை மதிப்பிடுவதற்கான தரநிலைகளையும் இது உள்ளடக்கி இருக்கும். தேசிய ஆசிரியர் பணித்தகுதிக்கான தரநிலைகள் என்பவை, பணிக்கு முந்தைய ஆசிரியக் கல்வி படிப்பின் வடிவமைப்பு குறித்தும் தெரிவிக்கும். பின்னர், இது மாநிலங்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டு, பணிக்காலம், பணித்தகுதி வளர்ச்சி முயற்சிகள், ஊதிய உயர்வுகள், பதவி உயர்வுகள் மற்றும் பிற அங்கீகாரங்கள் குறித்த ஆசிரியப் பணி மேலாண்மையின் அனைத்து அம்சங்களையும் நிர்ணயிக்கும். பதவி உயர்வுகளும் ஊதிய உயர்வுகளும் பதவிக்கால அளவின் அடிப்படையிலோ பணிமூப்பு அடிப்ப டையிலோ அமையாமல், அத்தகைய மதிப்பீட்டின் அடிப்படையில் மட்டுமே அமையும். இந்த பணித் தகுதிக்கான தரநிலைகள் 2030-இல் மறுஆய்வு செய்யப்பட்டு, பின்னர் ஒவ்வொரு பத்து ஆண்டிற்கும் ஒருமுறை, இந்த அமைப்புமுறையின் செயல்பாட்டுத் திறனைத் தீவிர செயலறிவுப் பகுப்பாய்விற்கு உட்படுத்துவதன் மூலம் திருத்தி அமைக்கப்படும்.”*

*“நல்ல கல்வி நிறுவனத்தில் மாணவர்கள் தாங்கள் வரவேற்கப்படுவதாகவும் அக்கறை செலுத்தப் படுவதாகவும் உணருவார்கள். அங்கே, கற்றல் ஆர்வத்தைத் தூண்டும் பாதுகாப்பான சூழல் நிலவும். அங்கே, பரந்த கற்றல் அனுபவங்கள் வழங்கப்படும். மேலும் அங்கே, எல்லா மாணவர்க்கும் கற்றுலுக்கு உகந்த நல்ல உள்கட்டமைப்பும் தேவையான வளங்களும் கிடைக்கும். இந்தப் பண்புகளை அடைவதே ஒவ்வொரு கல்வி நிறுவனத்தின் இலக்காக இருத்தல் வேண்டும். அதேநேரத்தில் கல்வியின் அனைத்து நிலைகளிலும் நிறுவனங்களுக்கு இடையில் தடையில்லா ஒருங்கிணைப்பும் கூட்டுறவும் இருத்தல் வேண்டும்.”*

*“A good education institution is one in which every student feels welcomed and cared for, where a safe and stimulating learning environment exists, where a wide range of learning experiences are offered, and where good physical infrastructure and appropriate resources conducive to learning are available to all students. Attaining these qualities must be the goal of every educational institution. However, at the same time, there must also be seamless integration and coordination across institutions and across all stages of education”.*

**Dharmendra Pradhan**
Hon'ble Education Minister;
Skill Development and
Entrepreneurship
Government of India
Shastri Bhawan
New Delhi-110001

सत्यमेव जयते

**தர்மேந்திர பிரதான்**
மாண்புமிகு அமைச்சர்
கல்வி; திறன்மேம்பாடும்
தொழில்முனைவும்
இந்திய அரசு,
சாஸ்திரி பவன்,
புதுதில்லி – 110001.



# வாழ்த்துரை

தேசியக் கல்விக் கொள்கை 2020 நாட்டிற்கு சிறந்த கல்வி வளர்ச்சிப் பாதையை நோக்கிய வழிகாட்டியாக அமைகிறது. அதன் முன்னோக்குச் சிந்தனை அணுகுமுறை மூலம், வெறும் அறிவாற்றலை ஏற்படுத்து வதாக மட்டும் இல்லாமல், கற்றலின் மீதான ஆர்வம், திறனாய்வுச் சிந்தனை மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றைத் தூண்டும் ஆசிரியக் கல்வி அமைப்புக்கு வழிகோலுகிறது. இவை இருபத்தொன்றாம் நூற்றாண்டின் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் பொருட்டு ஆசிரியர்களைத் தயார்படுத்துவதில் தவிர்க்க முடியாப் பண்புகளாகும்.

வருங்காலத் தலைமுறையின் எண்ணங்களை வடிவமைப்பதில் ஆசிரியர்கள் வகிக்கும் முதன்மையான பங்கை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குத் தேவையான கருவிகளையும் அறிவாற்றலையும் வழங்குவது தலையாயது என்பதை இக்கொள்கை அங்கீகரிக்கிறது. பயன்தரும் கற்றல் நடைமுறைகளுக்கான எதிர் பார்ப்புகளையும் வழிகாட்டல்களையும் விரித்துரைப்பதன் மூலம் கல்வியின் தரத்தை உறுதிசெய்ய ஆசிரியர்களுக்கான பணித்தகுதித் தரநிலைகள் கட்டாயமானதாகும். ஆசிரியர்களின் திறன்கள், அறிவாற்றல், தகுதிகள் ஆகியவற்றை வடிவமைப்பதில் இந்தத் தரநிலைகள் முதன்மையான பங்கை வகிக்கின்றன.

தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகளுக்கான வழிகாட்டு ஆவணத்தை தேசிய ஆசிரியர் கல்வியியல் நிறுவனம் வழிகாட்டுக் கொள்கைகளின் கையேடாக உருவாக்கியுள்ளது. இது, பல்வேறு தளங்களிலான வல்லமையையும் பல்வேறு நிலைகளிலான பணித்தகுதிகளையும் உடைய ஆசிரியரின் பாத்திரத்திற்கு என்றே உரிய எதிர்பார்க்கத்தக்க பொறுப்புகளையும் திறன்களையும் தெளிவாகக் காட்டுகிறது. அந்த வகையில், திறமையானதும் ஊக்கமிக்கதுமான கற்பித்தல் ஆற்றலை வளர்த்தெடுப்பதற்கான ஒரு அளவு கோலாகவும் இது செயல்படுகிறது.

தொடர்ச்சியான முயற்சிகளால், நமது தேசத்தின் கல்விப்பரப்பு வருங்காலத் தலைமுறைகள் பயனுறுமாறு ஆக்கப்பூர்வமான மாற்றங்களைக் காணும் என்று நான் நம்புகிறேன்.

**(தர்மேந்திர பிரதான்)**

## வாழ்த்துரை




**அன்னபூர்ணா தேவி**
மாண்புமிகு கல்வி
இணையமைச்சர்
கல்வி அமைச்சகம்
இந்திய அரசு.


*தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் (NPST), ஆசிரியப் பணியை உயர்த்துவது, அனைவருக்கும் தரமான கல்வியை உறுதிசெய்வது ஆகிய வற்றில் ஒரு குறிப்பிடத்தகுந்த மைல்கல்லை நாட்டுகிறது. இந்த வழிகாட்டு ஆவணம், கல்வியாளர்கள், வல்லுநர்கள், வல்லுநர் குழுக்கள், அத்துறையில் பங்குள்ளோர் ஆகியோருடனான நெறிதவறாத ஆலோசனை, ஆராய்ச்சி, ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தரநிலைகள், 21-ஆம் நூற்றாண்டில் பயன்தரும் கற்பித்தலை வரையறுக்கும் அடிப்படை அறிவு, திறன்கள், போக்குகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்த வழிகாட்டு ஆவணம், ஆசிரியர்களுக்கான தெளிவான எதிர்பார்ப்பு களை அமைப்பது மட்டுமின்றி, அறத்திலும் ஒழுக்கத்திலும், துறைசார் அறிவிலும், பணி மேலாண்மைக்கான சான்றுகளை உருவாக்குவதிலும் ஒரு தொடர் மேம்பாட்டு கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கிறது.*

*தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்திற்கும் (NCTE) இந்தத் தரநிலை களை உருவாக்குவதில் தலையாய பங்குவகித்த அனைவருக்கும் உளம் நிறைந்த வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.*

**********************************************************************************

## வாழ்த்துரை




**(சஞ்சய் குமார் IAS)**
செயலாளர்,
பள்ளிக்கல்வி &
எழுத்தறிவுத்துறை,
கல்வி அமைச்சகம்,
இந்திய அரசு.


*இந்திய ஆசிரியர் கல்விக் களத்தில் தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020-ஆனது மாற்றத்திற்கான சீர்திருத்தங்களைக் கொண்டுவந்துள்ளது. அனைவ ருக்கும் முழுமையான, தரமான கல்வி எனும் இலக்கை அடைய ஆசிரியப் பணியின் வளர்ச்சிக்குச் சிறப்புக் கவனம் தந்தும், ஆசிரியர்களை அனைத்து சீர்திருத்தங்களின் மையமாக வைத்தும் இக்கொள்கை வகுக்கப்பட்டு உள்ளது. தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020-இன் அனைத்து நோக்கங்க ளையும் மனதில் கொண்டு, நன்கு வடிவமைக்கப்பட்ட பொதுவான தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகளை (NPST) அடைவதற்கான ஒரு விரிவான வழிகாட்டு ஆவணத்தை தேசிய ஆசிரியர் கல்வியியல் நிறுவனம் (NCTE) உருவாக்கியுள்ளது. தொடர் விவாதங்கள்/ ஆலோசனைகளின் அடிப்படையிலும் பல்வேறு பங்கேற்பாளர்ளுடன் இணைந்தும் கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையைப் பின்பற்றியும் பல்வேறு நிலையிலான ஆய்வுகளைப் பின்பற்றியும் இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டு ஆவணம் ஆசிரியர்களின் திறன்களை மேம்படுத்தும் ஒரு திறனூக்கியாக இருந்து, அவர்களை உலகளாவிய தரநிலைகளுக்குச் சமமான ஆசிரியர்களாக்கும் என்றும் எதிர்பார்க்கிறேன்.*

*தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்திற்கும் இந்தப் பணியில் பங்காற்றிய அனைவருக்கும் எனது பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்.*

## வாழ்த்துரை



**பேரா. யோகேஷ் சிங்**
*தலைவர்,*
*தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம்,*
*புதுதில்லி.*

*தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020, ஆசிரியர்களின் பணிவாய்ப்பு மற்றும் 21-ஆம் நூற்றாண்டுக்கான திறன் அமைவுகளை குறிப்பிடும் உயர்தர கற்பித்தலினை வலியுறுத்துகின்றது. தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் (NPST) குறித்த வழிகாட்டு ஆவணத்தின் உருவாக்கம் நமது மாணவர்களின் கல்வி நோக்கங்களை நிறைவுசெய்யும் திறன்வாய்ந்த ஆசிரியர்களை உருவாக்குவதைத் தனது இலக்காகக் கொண்டுள்ளது. இந்தத் தரநிலைகள், பணியிலும் நடத்தையிலும் சாத்தியமான உயர் தரநிலைகளை அடையும் பொறுப்புள்ள ஆசிரியர்களுக்கு ஒரு செயல்களத்தை வழங்கு கிறது. இதில் வரையறுக்கப்பட்டுள்ள பொது தரநிலைகள் ஆசிரியர்களின் அற விழுமியங்கள், ஒழுக்கங்கள், வலுவான பாடப் பொருளறிவு, பணிசார் தொடர்புகள், பணி வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்குமான திட்டம் ஆகிய வற்றில் கவனம் செலுத்துகிறது. அனைவருக்கும் தரமான கல்வியை அளித்தே தீருவோம் எனும் வேட்கையை வளர்தெடுக்க அனைத்து பங்குள் ளோரிடமிருந்தும் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன்.*

******************************************************************************

## வாழ்த்துரை



**கேசங் ஒய். ஷெர்பா IRS**
*செயல் உறுப்பினர்,*
*தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம்,*
*புதுதில்லி.*

*இந்தியாவில் ஆசிரியக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான பல்வேறு முன்னெடுப்புகளைச் சட்டமுறை அமைப்புக் குழுவானத் தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம் (NCTE) எடுத்துள்ளது. தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020, உயர்தரமான ஆசிரியர்களைத் தரமான கற்றல் கற்பித்தல் செயல்முறை களுக்கு இன்றியமையாத முன்தேவையாக அங்கீகரிக்கிறது. இதனை யொட்டி, அக்கொள்கையின் 5.20-ஆம் எண்ணிட்ட பத்தியில் தெளிவாகத் திட்டமிட்டுள்ளவாறு தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம், தேசிய ஆசிரியர் பணித் தகுதித் தரநிலைகள் (NPST) குறித்த வழிகாட்டு ஆவணத்தை வெளியிட்டுள்ளது. இந்த வழிகாட்டு ஆவணத்தில் வரையறுக்கப்பட்ட தரநிலைகள், 21-ஆம் நூற்றாண்டில் பயன்தரும் கற்பித்தலை உருவாக்க ஆசிரியர்கள் தெரிந்திருக்க வேண்டியவை, செயல்படவேண்டிய விதம் மற்றும் அவர்களின் பணிவளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய ஆசிரியர் களுக்கான பணித்தகுதித் தரநிலைகள் குறித்த ஒரு பட்டியலைக் கொண்டுள்ளது. தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள், பணிக் காலத்தின் பல்வேறு நிலைகளில் வெவ்வேறு வல்லமை நிலைகளிலோ/ அனுபவத்திலோ உள்ள ஆசிரியர்களிடம் வேண்டப்படும் எதிர்பார்ப்பு களையும் திறன்களையும் உள்ளடக்கும்.*

*எனது மூத்தோர் அனைவருக்கும் மற்றும் தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் குறித்த வழிகாட்டு ஆவணத்தை உருவாக்கி வடிவமைக்கும் முயற்சியில் துணைநின்ற வரைவுக்குழு உறுப்பினர்களுக்கும் எனது நன்றியை வெளிப்படுத்துகிறேன். தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்தின் ஒட்டுமொத்த குழுவிற்கும் எனது பாராட்டுகள்.*

# உள்ளடக்க அட்டவணை


| வ.எண் | உள்ளடக்கம் | பக்க. எண் |
|---|---|---|
| **1.** | **அறிமுகம்** | **1** |
| **2.** | **கற்பித்தல் : ஒரு தொழிற்பணி** | **3** |
| 2.1 | கற்பித்தல், ஒரு தொழிற்பணியாக | 3 |
| 2.2 | பணித்தகுதித் தரநிலைகளைப் புரிந்துகொள்ளல் | 5 |
| 2.3 | ஆசிரியர்களுக்கும் கற்பித்தலுக்குமான பணித்தகுதித் தரநிலைகளின் முக்கியத்துவம் | 5 |
| **3.** | **தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் *(NPST)*** | **6** |
| 3.1 | தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் பொருத்தப்பாடு | 6 |
| 3.2 | ஆசிரியர்களுக்கான பணித்தகுதித் தரநிலைகள் | 7 |
| 3.3 | திறன்வளர்ச்சியும் மேம்பாடும் | 10 |
| 3.4 | தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் *(NPST)* | 11 |
| **4.** | **தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகளுக்கான வடிவமைப்பு** | **12** |
| 4.1 | தரநிலை 1: முக்கிய விழுமியங்களும் நெறிமுறைகளும் | 12 |
| 4.2 | தரநிலை 2: அறிவும் பயிற்சியும் | 12 |
| 4.3 | தரநிலை 3: தொழில்முறை வளர்ச்சியும் மேம்பாடும் | 13 |
| **5.** | **செயற்படுத்துகை** | **22** |
| 5.1 | செயல்திட்டம் | 22 |
| 5.2 | பயன்படுதன்மை | 23 |
| 5.3 | பருவ மறுசீராய்வு | 23 |
| **6.** | ***NPST* வடிவமைப்பின் அடிப்படையிலான மதிப்பீட்டுக் கருவிகள் (பரிந்துரை)** | **24** |
| **7.** | ***NPST* இல் உள்ள *NCTQ*க்கான டிஜிட்டல் உள்கட்டமைப்புத் திட்டம்** | **37** |
| **8.** | **விளக்கப்படங்களின் பட்டியல்** | **40** |
| **9.** | **சுருக்கக் குறியீடுகள்** | **41** |

| | | |
|---|---|---|
| **10.** | **துணைநூற்பட்டியல்** | **42** |
| **11.** | ***NPST*** **தரநிலையின் வல்லுநர் குழு** | **43** |

# 1. அறிமுகம்

தேசியக் கல்விக் கொள்கை 2020 (NEP 2020), இந்திய கல்வி அமைப்பின் அடிப்படை சீர்த்திருத்தங்களின் மையமாக ஆசிரியரை நிறுத்துகிறது. ஒவ்வொரு குடிமகனின் வாழ்க்கையிலும் தாக்கம் செலுத்தும் தொடர்ச்சியான கல்விச் செயல்பாட்டில் ஆசிரியர் என்பவர் முக்கியமான பங்கை வகிக்கிறார். தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் (NPST), அனைத்து மாணவர்களுக்கும் முடிந்தளவு சிறப்பான கல்வி கிடைப்பதற்குச் சமமான வாய்ப்பு இருப்பதை உறுதிசெய்யும் தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020-இன் நோக்கங்களை நிறைவேற்ற முயல்கின்றன. அனைத்து ஆசிரியர்களும் உற்சாகமாகவும், உந்துதலோடும், கூடுதல் தகுதி வாய்ந்தவர்களாகவும், நல்ல முன் தயாரிப்புள்ளவராகவும் பள்ளிப்படிப்பின் அனைத்து மட்டங்களிலும் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் கற்பிக்க ஆயத்தமாகவும் இருக்க வேண்டும் என்பதை தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் வலியுறுத்துகிறது. எனவே, சிறந்த திறனுடையவர்களை ஆசிரியப் பணி நோக்கி இழுப்பது காலத்தின் தேவையாகும்.

ஆசிரியர்களது பணியின் பல்வேறு கட்டங்களில் அவர்களின் பண்புகளை அடையாளம் காண தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் (NPST) உதவுகிறது. கூடுதலாக, ஆசிரியர்களின் முன்தயாரிப்பு, பயிற்சியளிப்பு, செயல்பாடுகளை மேம்படுத்தல் போன்றவற்றிலும் கவனம் செலுத்துகிறது. இதன் தரநிலைகளும் கொள்கை களும் தேசியக் கல்விக் கொள்கை 2020-இன் (NEP 2020) அடிப்படைக் கொள்கைகளுடன் ஒத்துப்போகிறது. இது நமது கல்வியமைப்பிற்கு வழிகாட்டுவதுடன் அனைவருக்கும் உயர்தரக் கல்வி அளிப்பதற்கான தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020-இன் கொள்கை முன்னெடுப்பு தொலைநோக்கையும் ஆதரிக்கிறது. இந்த தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள், பணிக்கு முந்தைய ஆசிரியர் கல்விப் படிப்பை வடிவமைக்கவும் ஆசிரியப் பணி நிருவாகத்தின் அனைத்து அம்சங்களை முடிவுசெய்யவும் உதவும்.

ஆசிரியர்களின் திறன்மேம்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பலன்களை மாணவர்கள் அறுவடை செய்கிறார்கள். இந்த ஆசிரியர் பணித்தகுதித் தரநிலை, பணியின் வெவ்வேறு கட்டங்களிலும் வெவ்வேறு வல்லமை நிலைகளிலும் ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுவனவற்றையும் அவை ஒவ்வொன்றுக்கும் தேவையான திறன்களையும் கோடிட்டுக் காட்டுகிறது. இந்தப் பணித்தகுதித் தரநிலையானது தேசிய அளவில் 2030-இல் மதிப்பாய்வு செய்யப்பட்டுத் திருத்தப்படும். அதன்பிறகு, ஒவ்வொரு பத்தாண்டுக்கும் ஒருமுறை அமைப்பினுடைய செயல்திறனின் தீவிர செயலறிவு பகுப்பாய்வின் அடிப்படையில் இது திருத்தப்படும்.

தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம் (NCTE) என்பது தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனச் சட்டம் (NCTE Act) 1993-இன் படி உருவாக்கப்பட்ட சட்டமுறை அமைப்புக்குழுவாகும். இது நாடு முழுவதுமுள்ள பணிக்கு முந்தைய ஆசிரியர்கள், பணியிலிருக்கும் ஆசிரியர்கள் ஆகிய இருதரப்பினருக்கான திட்டமிட்ட ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாட்டை வலியுறுத்துகிறது. இந்த தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தர நிலைகள் கல்வி அமைச்சகத்தின் (MoE) ஆணையாக 2021-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. இப்பணியை மேற்கொள் வதற்கான பொறுப்பு தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்திற்கு (NCTE) வழங்கப்பட்டது. தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் (NPST) ஆவணத்தை அதன் பல்வேறு அம்சங்கள்மீது பல்வேறு பங்குள்ளோரும் வழங்கிய ஆலோசனைகளின் அடிப்படையிலும் கருத்துகளின் அடிப்படையிலும் உருவாக்குவதற்கு ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. முதன்மை ஆய்வானது, டிஜிட்டல் ஆலோசனையாக MyNEP2020 சாளரத்தின் வழியாக ஏப்ரல் 2021-இல் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆவணத்தை உருவாக்குவதில் ஒட்டுமொத்த ஒத்திசைவிற்கும் கீழ்மேல் அணுகுமுறைக்கேற்ப ஆலோசனைகளையும் கருத்துகளையும் வரவேற்பதற்காக அது மேற்கொள்ளப்பட்டது. மேலும், துணைமை ஆய்வானது, வெவ்வேறு துறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட இலக்குப் பார்வையாளர்களிடம், கேள்விப்பட்டியல் மூலம் குறிப்பிட்ட கருத்துகளை வரவேற்பதற்காக நடத்தப்பட்டது.

பன்னாட்டு அளவில் சிறந்த நடைமுறைகளைத் தரமதிப்பீடு செய்வதற்காக, நான்கு நாடுகளின் தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலை ஆவணங்களை ஒப்பீட்டு ஆய்ந்து ஒரு அறிக்கை உருவாக்கப்பட்டது. வல்லுநர் குழுவால் மேற்கொள்ளப்பட்ட விவாதங்களாலும் மறுபார்வைகளாலும், தேசிய ஆசிரியர் பணித் தகுதித் தரநிலைகள் பற்றிய தொடக்கநிலை வரைவு உருவாக்கப்பட்டு தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்தின் இணையதளத்திலும் MyGov சாளரத்திலும் 17 நவம்பர் 2021 அன்று பொதுமக்களின் கருத்துக்கேட்பிற்காக வெளியிடப்பட்டது. அதேபோல, கல்வியாளர்கள், கல்விநிறுவன நிர்வாகிகள், ஆசிரியக் கல்வியியலாளர்கள், துறைத்தலைவர்கள், HoDs, SCERTs, DIETs, முதல்வர்கள், ஆசிரியர்கள் (அரசு/தனியார்), அரசு சாரா நிறுவனங்கள்

*(NGOs), பிற பங்குள்ளோர் ஆகியோருடன் 15 திறந்தநிலை விவாதங்கள், களத்தில் பணியாற்றும் செயல்பாட்டாளர்களிடமிருந்து தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் குறித்த தொடக்கநிலை வரைவுக்கான உள்ளீடுகள்/ யோசனைகளைப் பெறுவதற்காக நாடு முழுவதும் நடத்தப்பட்டது.*

*அதேநேரத்தில், இந்தத் தொடக்கநிலை வரைவிலுள்ள விவரிப்புகள் குறித்த கருத்துகளைப் பெறுவதற்கும் தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள திறனறிக் கருவிகள்/ முறைகள் மற்றும் திறன் மதிப்பீடுகள் குறித்த பரிந்துரைகளைப் பெறுவதற்கும் நாடு முழுவதிலுமிருந்து ஆசிரியர்கள், முதல்வர்கள், SCERTs, DIETs ஆகியோருடன் 5 உள்நிலை ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது. மூன்றாம்நிலை ஆய்வாக, பங்குள்ளோரின் கருத்துகளும் பரிந்துரைகளும் தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் இறுதி வரைவை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டு தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகளுக்காகக் கட்டமைக்கப்பட்ட குழுவின் முன்பு 29 மார்ச் 2022 அன்று வைக்கப்பட்டுக் களச் சோதனை வடிவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் வழிகாட்டு ஆவணத்தின் செயல்படுத்தலும் தாக்க மதிப்பீடும் 75 நடுவணரசுக்குச் சொந்தமான பள்ளிகளிலும் (25 கே.வி. + 25 ந.வி. + 25 சிபிஎஸ்இ) 1175 ஆசிரியர்களிடமும் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டது.*

*தேசியக் கல்விக் கொள்கை 2020-இன் பத்தி 5.20-இல் சொல்லியுள்ளபடி தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் கற்போர் அனைவருக்கும் சமமான உயர்தரக் கல்வி கிடைக்கச் செய்வதை இலக்காக கொண்டு உள்ளது. அனைத்து மாணவர்களும் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் உயர்தகுதிவாய்ந்த நன்கு பயிற்சி அளிக்கப்பெற்ற அனைத்துவகையிலும் தகுதியுடைய ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் பள்ளிக் கல்வியைக் குறித்த தேசியக் கல்விக் கொள்கை 2020-இன் ஆணையை அடைவதற்கு தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் குறித்த ஒரு வழிகாட்டு ஆவணம் உருவாக்கப்பட்டது. ஆசிரியப் பணி மேலாண்மை மற்றும் பிற அங்கீகாரங்களின் அனைத்து அம்சங்களையும் முடிவுசெய்வதை இது இலக்காக்கிக் கொண்டுள்ளது. இது தரம் குறித்த அறிக்கையாக உள்ளதோடு வெவ்வேறு பணிநிலைகள்/ களங்களில் உள்ள ஆசிரியர்களின் திறன்களையும் வரையறுக்கிறது.*

*ஆசிரியத் தகுதிக்கான தேசிய மையம் (NCTQ) ஒரு டிஜிட்டல் தளமாக தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்தில் நிறுவப்பட்டது. இது தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் செயலாக்கத்திற்கு பொறுப்பான தேசிய கிடங்கை (National Repository) கொண்டிருக்கும். மேலும், கூடுதல் வளம் கொண்ட ஆட்களை/ நிறுவனங்களை உருவாக்க, பங்குள்ளோர்/செயல்படுத்தும் நிறுவனங்களின் திறன்மேம்பாட்டு பயிற்சிகள் மேற்கொள்ளப்படும்.*

*புதிய பள்ளிக் கல்வி அமைப்பிற்கேற்ப (5+3+3+4) ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படும் திறன்தொகுதிகளை அடைய மாநிலங்கள்/ஒன்றிய ஆட்சிப்பகுதிகளின் அரசுகள் இந்தத் தரநிலைகளை ஏற்கலாம். நிறுவனங்களும் தங்களுக்கு ஏற்றவாறு இதைச் செயல்படுத்தலாம்.*

# 2. கற்பித்தல்: ஒரு தொழிற்பணி

## 2.1. கற்பித்தல், ஒரு தொழிற்பணியாக

கற்பித்தல் என்பது உலகளவில் உன்னதமான தொழில்களில் ஒன்றாகவும் சமூகவளர்ச்சியோடு தொடர்புடைய தாகவும் கருதப்படுகிறது. பழங்காலத்தில், ஆசிரியர் என்பவர் சமூகத்தில் மிகவும் மதிக்கத்தக்க சமூக உறுப்பினராக இருந்தார். ஆசிரியப்பணியில் நன்கு கல்விபெற்றவர்களே அனுமதிக்கப்பட்டனர். ஆசிரியர்கள் கல்வியமைப்பின் மையமாக இருந்ததோடு அறிவு, திறன், நன்னெறிகளை உகந்தவகையில் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கும் தேவைப்பட்டனர். கல்வியமைப்பு வளர்ச்சியடைந்த நிலையிலும் ஆசிரியர்களின் பங்கு மாற்றமடைந்த நிலையிலும், நீண்டகால மற்றும் நிலையான தேசக் கட்டமைப் பிற்காகவும், ஆசிரியர்களின் தரத்தை மேம்படுத்துவது மிகவும் முக்கிய பணியாகிறது. கற்பித்தல் ஒரு சமூக நடவடிக்கையும் அதே வேளையில் சமூக ஆய்வுமாகும். இது ஆழ்ந்த நன்னெறி சார்ந்தது அதேவேளையில் தரநெறிகளைக் கைக்கொள்வது. இதில் தேர்ந்தவர்கள் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும்:

- குழந்தைகள் மீதான அக்கறை மற்றும் அவர்களுடன் இருக்க விரும்புதல், மாணவர்களின் பன்முகத் தன்மையைப் போற்றுதல், சமூக, பண்பாட்டு மற்றும் அரசியல் நிலைமைகளில் குழந்தைகளைப் புரிந்துகொள்ளல், குழந்தைகளின் தேவைகளைப் புரிந்து அவர்களின் உணர்திறனை வளர்த்தல் மற்றும் அவர்களின் சிக்கல்களை உணர்ந்து அனைவரையும் சமமாக நடத்துதல்.

- கற்கும் குழந்தைகளை அறிவைப் பெறுபவர்களாக மட்டும் கருதாமை, பொருளைப் புரிந்து கொள்ளும் அவர்களது இயற்பண்பை விரிவாக்குதல், பொருளுணரா மனப்பாடக் கல்வியை ஊக்கு விக்காமை மற்றும் மகிழ்ச்சியான, பங்கேற்கும், பயனுள்ள கற்றலை உருவாக்கல்.

- பாடத்திட்டம் மற்றும் பாட நூல்களை திறனாய்வுரீதியாக ஆய்வு செய்தல் மற்றும் உள்ளூர் தேவைகளுக்கு ஏற்றார்போல் பாடத்திட்டங்களை அமைத்தல்.

- அறிவு என்பதைப் பாடத்திட்டத்திற்கு உட்பட்டதாகக் கருதக் கூடாது.

- விளையாட்டு, திட்டங்கள், கலந்துரையாடல், உரையாடல், உற்றுநோக்கல், கல்விச் சுற்றுலா ஆகிய வற்றைக் கொண்டு தங்கள் செயல்முறைகளை மீண்டும் ஆய்பவர்களாகவும் மாற்றுகிற கற்போரை மையமிட்ட, செயலடிப்படையிலான, பங்கேற்புடைய கற்றல் அனுபவங்களை உருவாக்குதல்.

- கற்போரின் சமூக மற்றும் தனிப்பட்ட எதார்த்தங்களை கற்றலுடன் ஒருங்கிணைக்கக் கூடியதாகவும் பன்முகத்தன்மைக்கு மதிப்பளிக்கக் கூடியதாகவும் வகுப்பறை இருத்தல்.

- அமைதி, ஜனநாயகத்தின் வழிப்பட்ட வாழ்வு, சமத்துவம், நீதி, சுதந்திரம், சகோதரத்துவம், மதச் சார்பின்மை ஆகியனவற்றின் விழுமியங்களை ஊக்குவித்தலும் சமூகத்தை மாற்றியமைத்தலில் பேரார்வம் கொள்ளலும்.

பங்குள்ளோரிடையே கலந்தாய்வின் மூலம் தரநிலைகள் குறித்து தெளிவுபடுத்தி கருத்தொற்றுமையை எட்டுதல் பின்வருவனவற்றிற்கு வழிவகுக்கும்:

- சிறந்த கற்பித்தல் அம்சங்களில் சிறந்த தெளிவும் அர்ப்பணிப்பும்.

- சிறந்த கற்பித்தலை முறைப்படுத்தி அதற்கு உதவும் சூழல் சார்ந்த கருத்துகளைப் புரிந்துகொள்ளல்.

- தமது தொழில்சார் நடைமுறைகளின் தேவையான பரிமாணங்களை ஆசிரியர்களுக்குத் தெளிவு படுத்தி, கற்போரை மையமிட்ட வகுப்பறையை உருவாக்குவதும் அவர்களின் சுயசிந்தனைக்கு வழிகாட்டுவதுமாக ஆசிரியப்பணி அமைதல்.

- ஆசிரியர்களுக்கு உதவுவதற்காக அகச்சூழல் மற்றும் புறச்சூழல்களை வடிவமைத்து மேலாண்மை செய்தல் குறித்த மேலான புரிதல், நல்ல கற்பித்தல் மற்றும் பணிக்கால உயர்வுக்கு ஆசிரியர்களைத் தயார்படுத்துதல்.

கல்வி உரிமைச் சட்டம் (RTE) 2009 ஆசிரியர்களிடமிருந்து முக்கியமான எதிர்ப்பார்ப்புகளையும் தரமான கற்பித்தலையும் முன்வைக்கிறது. அதாவது பள்ளியில் குழந்தைகள் ஆக்கப்பூர்வமான கற்றல் அனுபவத்தைப் பெற்று அத்தகைய கல்வியின்மூலம் தன்மேம்பாடு அடைவதை உறுதிசெய்ய வேண்டும் என்கிறது. இந்த வகையில், **கல்வி உரிமை சட்டம் 2009 உட்பிரிவு 29/2** இன்படி கற்பித்தல் என்பது கீழ்க்காணும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

- ஜனநாயகம், நீதி, அமைதியான சமூகம் ஆகியவற்றை முன்னிறுத்த இந்திய அரசியலமைப்பில் உள்ள விழுமியங்களுக்கு இணங்க கற்பித்தல் இருக்க வேண்டும்.

- கற்பவரின் உயரிய வளர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டும்.

- மாணவர்களின் அறிவு, உள்ளாற்றல், செயல்திறனை உருவாக்கவேண்டும்.

- மாணவர்களின் உடல் மற்றும் மனத்திறன்களை முழு அளவில் மேம்படுத்த வேண்டும்.

- குழந்தை மையமிட்ட, அவர்களுக்கு எளிமையான விதத்தில் செயல்பாடுகள், கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வுகளின் வழிப்பட்ட கற்றலை அமைக்க வேண்டும்.

- இயன்றவரை மாணவர்களின் தாய்மொழியில் கற்றலுக்கான வாய்ப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

- அச்சம், அதிர்ச்சி, பதற்றம் ஆகியவை இல்லாத சுதந்திரமான கற்றலையும் சுதந்திரமான தொடர் பாடலையும் மாணவர்களுக்கு உறுதிசெய்யவேண்டும்.

- திறன் மற்றும் புரிதல் இரண்டின் அடிப்படையிலான முழுமையான தொடர் மதிப்பீட்டில் ஈடுபடல்.

இவ்வாறாக, ஒவ்வொரு குழந்தையும் கண்ணியமான வாழ்வை அடைய உதவுதல்.

மேலும், விளிம்புநிலைச் சமூகங்கள், மொழி மற்றும் கலாச்சாரச் சிறுபான்மை குழுக்கள், அட்டவணைச் சாதியினர், அட்டவணைப் பழங்குடியினர், பிற பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் மற்றும் சிறப்புத் தேவைகளைக் கொண்ட குழந்தைகளையும் உள்ளடக்கியதாக கல்வி இருப்பதை உறுதி செய்வதற்கான சிறப்பு முயற்சிகளின் அவசியத்தை இந்திய அரசியலமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

கல்வி உரிமையும், தேசியக் கல்விக் கொள்கை 2020-இல் கூறப்பட்டுள்ள கல்வியின் நோக்கமும் அனைவரையும் உள்ளடக்கிய கல்விக்கும் பள்ளியின் அனைத்து நிலைகளிலும் வகுப்பறைகளின் பன்முகத் தன்மைக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றன.

ஆசிரியர்களின் கல்வி நடைமுறைகள் எதிர்கொள்ள வேண்டிய குறிப்பிட்ட சவால்களுக்கு தேசியக் கல்விக் கொள்கை 2020 கவனம் செலுத்துகிறது. **(திட்டக் கொள்கைகள்)**

- கற்றல் என்பது, பொருளுணராத மனப்பாடக் கல்வியில் இருந்து உயர்நிலைச் சிந்தனை, திறனாய்வு சிந்தனை, ஆராய்தல் மற்றும் இருபத்தோராம் நூற்றாண்டின் திறன்களைப் பெறுதல் என்ற நிலைகளை நோக்கி மாறுதல்.

- கற்றலைப் பன்முகப் பார்வையுடையதாகவும் அனுபவமுடையதாகவும் செயல்முறை சார்ந்ததாகவும் வடிவமைத்தல்.

- பன்மொழித்தன்மை.

- மாணவர்கள் நம்நாட்டு அறிவு மரபுகளை மதித்து அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள உதவுதல்.

## 2.2. பணித்தகுதித் தரநிலைகளைப் புரிந்துகொள்ளல்

தரநிலைகள் என்ற சொல் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு சூழல்களில் வெவ்வேறு பொருள்களில் விளக்கப்படுகிறது. உயர் இலக்கை அடைவதற்குரிய கற்றல் அல்லது பயிற்சிச் சொல்லாடலை விளக்குவதற்கும் தொடர்பாடுவதற்கும், தொழிலில் மதிக்கத்தக்கனவாக இருப்பனவற்றையும் பற்றிய கூற்றுகளே தரநிலைகள் ஆகும். கற்றல் சூழலில், தரநிலைகள் என்பன கற்றலின் விளைவு அடிப்படையில் வரையறுக்கப்படுகின்றன. ஆனால் பணிநிலை அல்லது தொழில்நிலை சார்ந்த சூழலில் தரநிலைகள் என்பன திறனின் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டு வரையறுக்கப்படுகின்றன. அதாவது ஒரு குறிப்பிட்ட பணிநிலைக் களத்தில் திறமையானவராக கருதப்படுவதற்கு ஒருவர் என்ன தெரிந்துகொள்ள வேண்டும், என்ன செய்ய வேண்டும் போன்றவற்றால் வரையறுக்கப்படுகின்றன. வேறு சொற்களில் சொல்வதெனில், தரநிலைகள் என்பன, தகுதிசார் செயல்பாட்டுக்குத் தகுந்ததாகக் கருதப்படுவதற்குத் தரக்குறி அல்லது பணிநிலைகளின் நடவடிக்கைகளை அளவிடுவதற்கான கருவியாகப் பயன்படுகின்றன. தரநிலைகள் என்பன பணிநிலையில் என்ன மதிப்பிடப்படுகிறது என்பதைப் பிரதிபலிக்கும் கூற்றுகளாகும், தரமான கற்றல் என்ன என்பதற்கான அடிப்படை அனுமானத்துடன் தரமான கற்பித்தலை உடையதாகவும் இருக்கின்றன. ஆசிரியர்கள் எதைத் தெரிந்து கொள்ள வேண்டும், எதை நம்ப வேண்டும், எதைச் செய்ய முடியும் என்பதை உணர்த்துவதற்கான மதிப்பீடுகள் என்ன என்பதை இந்த அறிக்கைகள் முறைப்படுத்துகின்றன.

## 2.3 ஆசிரியர்களுக்கும் கற்பித்தலுக்குமான பணித்தகுதித் தரநிலைகளின் முக்கியத்துவம்

நல்ல, விரும்பத்தகுந்த கற்பித்தல் மற்றும் ஆசிரியர்களின் தகுதிகள், பண்புநலன்கள் முதலியன குறித்த விளக்கம் பல்வேறு கொள்கை ஆவணங்களில் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ காணப்படுகின்றன. இந்தக் கருத்துக்கள், நடுவணரசின் நிதியுதவியுடனான கல்வி மேம்பாட்டு இயக்கங்களின் தொடக்கத்தின் மூலம் பணியிலுள்ளோரின் கல்வி மற்றும் பயிற்சியின் இலக்குகளைத் தெரிவித்துள்ளன. அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) போன்றவை இத்தகையனவாகும். ஆசிரியர் கல்விக்கான தேசிய கலைத்திட்ட வடிவமைப்பில் (NCFTE, 2009) அமைந்துள்ள வழிகாட்டுதல்களில் இந்தக் கருத்துக்கள் மறைமுகமாகவே உள்ளன. தேசியக் கல்விக் கொள்கை 2020ல் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, பணிக்கு முந்தைய ஆசிரியர் கல்வித் திட்டங்களுக்கான கலைத்திட்ட வடிவமைப்பை உருவாக்குவதிலும் வடிவமைப் பதிலும் சமீபத்தில் அவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பணி உருவாக்கப்பட்டு நிறுவப்படுவதை பணித்தகுதித் தரநிலைகள் நிர்வகிக்கும் என்பதை தேசியக் கல்விக் கொள்கை 2020 முன்மொழிகிறது. பொறுப்புடமை, கண்காணித்தல், பணி மேம்பாடு, பணியின் ஒவ்வொரு படிநிலைகள், குத்துநிலை நகர்வு (vertical mobility) ஆகிய அனைத்துடனும் பணித்தகுதித் தரநிலைகள் தொடர்பு உடையதாக இருக்கிறது. ஆசிரியர் பணித்தகுதித் தரநிலையின் ஒரு தொகுதி பின்வருவனவற்றைச் செய்யும்:

- ஆசிரியருடைய பணியின் இயல்பை வரையறுத்தல்
- வேலை மற்றும் சேவை நிலைகளை உருவாக்கல்.
- ஆசிரியக் கல்விப் படிப்புகளை புதிய வடிவில் மறுஉருவாக்கம் செய்தல்
- ஆசிரியர்களைப் பதிவு செய்ய வைத்தல்
- வாழ்நாள் முழுவதற்குமான கற்றலையும் பணி மேம்பாட்டையும் ஊக்குவித்தல்.
- ஆசிரியருக்கான தகுதிகளில் ஒருமித்த தன்மையை உருவாக்குதலும் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தலும்
- ஆசிரியரின் தகுதியை மதிப்பிடல்.
- ஆசிரியர் ஊக்குவிப்புக்கு உதவுதல்.
- ஆசிரியரின் பொறுப்புகள் மற்றும் கடமையை உறுதிசெய்தல்.

தரநிலைகளின் குறிப்பிட்ட பயன்பாட்டின் அடிப்படையில் அவற்றின் சிறப்பியல்புகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் வேறுபடலாம் ஆனால், தரநிலைகளின் பொதுவான ஒரு தொகுதி இருக்குமானால், அது ஆசிரியர்களுக்கும், ஒரு பணிநிலையாக கற்பித்தலுக்கும் தொடர்புடைய பல்வேறுவிடங்களுக்கான எல்லா விதக் கொள்கைகளிலும் ஒத்திசைவு இருப்பதை உறுதிசெய்யும்.

# 3. தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் (NPST)

*அறிவுப்பரப்பில் இந்தியா மாற்றமடைந்து வருகிறது. எனவே, இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தேவைகளை நிறைவுசெய்ய கல்வியமைப்பில் சீரமைப்புச் செய்வது முக்கியமாகிறது. இந்தியாவின் தேசியக் கல்விக் கொள்கை 2020 என்பது இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நாட்டின் முதல் கல்விக் கொள்கையாகும். அத்துடன், இது நமது நாட்டின் பல வளர்ச்சித் தேவைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆசிரியர்கள் உண்மையில் நமது குழந்தைகளின் எதிர்காலத்தை வடிவமைக்கிறார்கள், இதன்மூலம் நமது நாட்டின் எதிர்காலத்தையும் வடிவமைக்கிறார்கள். அனைவருக்குமான முழுமையான தரமான கல்வி எனும் இலக்கை அடைய, தேசியக் கல்விக் கொள்கை 2020 ஆசிரியப் பணியின் வளர்ச்சிக்குக் குறிப்பாக அழுத்தங் கொடுக்கிறது. அத்துடன், ஆசிரியர்களை அனைத்து சீர்திருத்தங்களுக்கும் மையமாக வைக்கிறது. சிறந்தவர் களையும் அறிவுடையோரையும் ஆசிரியப் பணிநோக்கி ஈர்க்கவும் ஆசிரியர்களை மேம்படுத்தவும் முடிந்தளவு அவர்களின் பணியைச் சிறப்பாக மேற்கொள்ள அவர்களுக்கு உதவவும் இது வழிசெய்கிறது.*

### 3.1 தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் பொருத்தப்பாடு

*“தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT), மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (SCERT), வெவ்வேறு பணிநிலைகளிலும் பகுதிகளிலும் உள்ள ஆசிரியர்கள், ஆசிரியர்களின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் வல்லமை பெற்ற நிறுவனங்கள், தொழில்முறை கல்வியில் வல்லமை பெற்ற குழுக்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து, பொதுக் கல்வியியல் கழகத்தின் (GEC) கீழுள்ள பணித்தகுதி அமைப்புக்குழுவாக (PSSB), தேசிய ஆசிரியர் பணித் தகுதிக்கானத் தரநிலைகள் (NPST) குறித்த பொதுவழிகாட்டல் ஒன்று, மறுகட்டமைக்கப்பட்ட புதுவடி வத்தில், தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்தால் 2022 வாக்கில் வளர்த்தெடுக்கப்படும். இந்தத் தரநிலைகள், வெவ்வேறு வல்லமை அல்லது படிநிலை தளங்களில் உள்ள ஆசிரியரின் பங்கையும் அந்தந்த நிலைகளுக்கு தேவையான திறன்களையும் குறித்த எதிர்ப்பார்ப்புகளை உள்ளடக்கியதாக இருக்கும். மேலும், குறிப்பிட்ட கால அடிப்படையில் நிகழும் ஒவ்வொரு நிலைக்குமான செயல்பாடுகளை மதிப்பிடுவதற்கானத் தரநிலைகளையும் இது உள்ளடக்கியிருக்கும். தேசிய ஆசிரியர் பணித்தகுதிக்கானத் தரநிலைகள் என்பவை, பணிக்கு முந்தைய ஆசிரியக் கல்வி படிப்பின் வடிவமைப்பு குறித்தும் தெரிவிக்கும். பின்னர், இது மாநிலங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பணிக்காலம், பணித்தகுதி வளர்ச்சி முயற்சிகள், ஊதிய உயர்வுகள், பதவி உயர்வுகள் மற்றும் பிற அங்கீகாரங்கள் குறித்த ஆசிரியப் பணி மேலாண்மையின் அனைத்து அம்சங்களையும் நிர்ணயிக்கும். பதவி உயர்வுகளும் ஊதிய உயர்வுகளும் பதவிக்கால அளவின் அடிப்படையிலோ பணிமூப்பு அடிப்படையிலோ அமையாமல், அத்தகைய மதிப்பீட்டின் அடிப்படையில் மட்டுமே அமையும். இந்த பணித்தகுதிக்கானத் தரநிலைகள் 2030-இல் மறுஆய்வு செய்யப்பட்டு, பின்னர் ஒவ்வொரு பத்தாண்டிற்கும் ஒருமுறை, இந்த அமைப்புமுறையின் செயல்பாட்டுத் திறனைத் தீவிர செயலறிவு பகுப்பாய்விற்கு உட்படுத்துவதன் மூலம் திருத்தியமைக்கப்படும்.” (தேசியக் கல்விக் கொள்கை 2020, பத்தி 5.20)*




படம். 1 ஆசிரியர்களின் ஆயத்தநிலை பற்றிய விளக்கப்படம்

3.1.1 **ஆசிரியக் கல்வி** - தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் தேசியக் கல்விக் கொள்கை 2020-இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பணிக்கு முந்தைய ஆசிரியக் கல்வியில் 4, 2, 1 ஆண்டு பி.எட் படிப்புக்கான திட்டத்தை தெரிவிக்கும்.

3.1.2 **ஆசிரியப் பணிப்பொறுப்பு மேலாண்மை** – வெவ்வேறு வல்லமை நிலைகளில் உள்ள ஆசிரியரின் பணிப் பொறுப்பு குறித்த எதிர்பார்ப்புகளையும் அந்தக் குறிப்பிட்ட நிலைக்குத் தேவைப்படும் திறன்களையும் இந்தத் தரநிலைகள் உள்ளடக்கும். ஒவ்வொரு நிலைக்கும் செயல்பாட்டு மதிப்பிடலுக்கான தரநிலை களையும் தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் உள்ளடக்கும்.

3.1.3 **ஆசிரியப் பணி மேலாண்மை** – பணிக்காலம், தொழில்முறை மேம்பாட்டு முயற்சிகள், ஊதிய உயர்வுகள், பதவி உயர்வுகள் மற்றும் பிற அடையாளங்காணல்கள் உள்ளிட்ட ஆசிரியப் பணி மேலாண்மையின் அனைத்து அம்சங்களும்.

3.1.4 **ஆசிரியத் தொழில்முறை மேம்பாடு** – சுயமுன்னேற்றத்திற்கும் தங்களது பணிகளில் உள்ள அண்மைக் காலப் புதுமைகளையும் வளர்ச்சிகளையும் கற்பதற்கும் ஆசிரியர்களுக்குத் தொடர்ச்சியான வாய்ப்புகள் வழங்கப்படும்.

தேசியக் கல்விக் கொள்கை 2020-இன் படி, ஆசிரியரை ஆயத்தமாக்குதல் என்பது பல்துறைசார் நோக்குமுறைகள் மற்றும் அறிவு, ஒழுங்கமைவுகளையும் விழுமியங்களையும் ஏற்படுத்துதல், சிறந்த வழிகாட்டிகளின்கீழ் செயல்பாட்டில் மேம்பாடு ஆகியவை தேவைப்படும் ஒரு செயலாகும். ஆசிரியர்கள் இந்திய விழுமியங்கள், மொழிகள், அறிவு, பொதுப்பண்புகள் மற்றும் மரபுகள் ஆகியவற்றில் வேரூன்றியவர் களாக இருக்கும் அதே நேரத்தில் கல்வி மற்றும் கற்பித்தலில் அண்மைக்கால முன்னேற்றங்களை நன்கு அறிந்திருக்க வேண்டும் என்றும் இது கருதுகிறது. தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள், கற்பித்தல் தரம் என்றால் என்ன, இந்தியாவில் மாணவர்களது கல்வியின் இறுதி விளைவுகளை மேம்படுத்த என்ன தேவை என்பவற்றைக் கொண்ட பொது அறிக்கையாகும். பணியின் வெவ்வேறு நிலைகளில் உள்ள வெவ்வேறு வல்லமை நிலைகளிலுள்ள ஆசிரியர்களின் பாத்திரம் குறித்த எதிர்பார்ப்புகளை வரையறுக்கும் வழிகாட்டு கூற்றுகளின் தொகுப்பாக இந்தத் தரநிலைகள் இருக்கும். சீரிய கற்பித்தல் என்பது எப்படி இருக்கும் என்றும் ஆசிரியப் பணியின் ஒவ்வொரு நிலையிலும் 21-ஆம் நூற்றாண்டுப் பள்ளிகளில் ஆசிரியராக பணியாற்ற எந்த விதமான திறன்கள் தேவைப்படும் என்றும் வரையறுக்கிறது.

## 3.2 ஆசிரியர்களுக்கான பணித்தகுதித் தரநிலைகள்

ஆசிரியர்களுக்கான பணித்தகுதித் தரநிலைகளுக்கான வடிவமைப்பு, நல்ல ஆசிரியர்கள் மற்றும் நல்ல கற்பித்தலின் பண்புகளைப் பற்றிய வெளிப்படையானதும் மறைமுகமானதுமான வெளிப்பாடுகளை அடிப்ப டையாகக் கொண்டது. கூடுதலாக, இது இந்தியாவில் கற்பித்தல் மற்றும் ஆசிரியர் உருவாக்கம் குறித்த

ஆய்வுகளிலும் கவனம் செலுத்துகிறது. மேலும், இதேபோன்ற சூழலில், ஆசிரியர்கள் மற்றும் கற்பித்தலை வரையறுப்பதற்கும் மதிப்பிடுவதற்குமான முயற்சிகளையும் இது கோடிட்டுக் காட்டுகிறது.

### a) திறன்

ஆசிரியர்களுக்கான பணித்தகுதித் தரநிலைகளை வகுப்பதில், கற்பித்தலுக்கு இன்றியமையாததாக அடையாளம் காணப்பட்ட திறன்களுக்கான மையத் தரநிலைகளின் பொதுவான தொகுப்பின்மீது கவனம் செலுத்தப்படுகிறது. திறன் என்பதன் மூலம், அறிவு, தனித்திறன்கள், புரிதல், விழுமியங்கள், மனப்பான்மைகள் மற்றும் விருப்பம் ஆகியவற்றின் கலவையை நாம் குறிப்பிடுகிறோம். இது ஒரு குறிப்பிட்ட கள எல்லைக்குள் பயனுள்ள, மனித நடவடிக்கைக்கு வழிவகுக்கிறது.

### b) கள எல்லைகள்

ஆசிரியரின் அறிவு மற்றும் கற்பித்தல் பயிற்சி (கற்பித்தலுக்கு முன், கற்பித்தலின் போது, கற்பித்தலுக்குப் பின்) ஆகியன ஒன்றோடொன்று தொடர்புடைய களங்களாகும். மேலும் இரண்டும் நம்பிக்கைகள், தனித்திறன்கள், தகவல்தொடர்பு திறன்கள், தொழில்முறை அடையாளம், அறங்கள், விழுமியங்கள் மற்றும் மனநிலைகளுடன் தொடர்புடையவையாகும். பின்வரும் மூன்று களங்கள் தரநிலைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன:

1. மைய விழுமியங்களும் அறங்களும்
2. அறிவும் பயிற்சியும்
3. தொழில்முறை வளர்ச்சியும் மேம்பாடும்

### c) ஆசிரியர் சுயவிவரம்

கற்பித்தல் வல்லமையில் உருவாகியுள்ள வளர்ச்சி மற்றும் மேம்பாடு பற்றிய கருத்து, முடிந்த அளவுக்கு, சிறப்பாகக் கற்பிப்பதற்கான முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் காட்டுகிற வகையில் இங்கு விளக்கப்படுகிறது. இது மாற்றங்கள், வளர்ச்சி ஆகிய இரண்டுக்குமான பாதைகளையும் அவாவையும் உருவாக்குவதுடன், தொழில்முறை வல்லுநர்கள் அடையத்தக்க உயர்தரங்களை அங்கீகரிப் பதற்கான அடிப்படையாகவும் அமைகிறது. தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலையைப் பொறுத்தவரை, பின்வரும் மூன்று நிலைகள் கற்பித்தலின் அனைத்து களங்கள் மற்றும் திறன்களுக்கு, பள்ளிக் கல்வி மற்றும் பாடங்களது கற்பித்தல் பரப்பின் வெவ்வேறு நிலைகளிலும் பொருந்தும் என்று முன்மொழியப்பட்டுள்ளன. இந்த நிலைகளும் அவற்றின் விளக்கங்களும் ஆசிரியர்களால் என்ன செய்ய முடியும், அவர்கள் மேலும் வளர்த்துக் கொள்ளக்கூடிய பகுதிகள் எவை ஆகியவை பற்றிய ஒரு பார்வையை உருவாக்க உதவும் கருவி களாக பயன்படுத்தப்பட வேண்டும். கீழ்க்கண்ட நிலைகளில் ஆசிரியர்கள் பெற்ற திறமைகளது ஆதாரங்களின் அடிப்படையில் அவர்களைப் பணியமர்த்தவும் இது உதவும்:

1. திறமையானவர்
2. மேம்பட்டவர்
3. வல்லுநர்

தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் என்பது உயர்தர ஆசிரியர்களைத் தயாரிப்பதிலும் உருவாக்கு வதிலும் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குள்ளோருக்கும் உதவும் ஒரு வழிகாட்டும் ஆவணமாகும். இது ஆசிரியர்களாக மாற முடிவு செய்ததிலிருந்து ஆசிரியர்களாக தமது கற்பித்தல் பயணத்தை முடிக்கும் வரை அத்தகையோருக்கு ஒரு தெளிவான திறன் பாதையை வழங்குகிறது. தரமான ஆசிரியர்களை உருவாக்க ஆசிரியர் கல்வி நிறுவனங்களுக்கு இந்த ஆவணம் வழிகாட்டுகிறது.

கற்பித்தல் பணிநிலை சுயவிவரத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைவதற்கு முன்தேவையான திறன்களாக இந்தத் தரநிலைகள் வரையறுக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு ஆசிரியர் திறன்களைப் பெறுவதன் மூலமும், இலக்குப் பணி நிலையை அடைவதற்குத் தேவைப்பட்ட திறன்களைப் பெற்றுக்கொண்டதற்கான ஆதாரங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும் இந்த முன்தேவைகளை அடைந்ததாக கருதப்படலாம்.. ஒரு கட்டத்தின் தரநிலைகளை அடைந்த பிறகு, ஒரு ஆசிரியர் சான்றிதழ் பெற்று முறையாக அந்தக் கட்டத்திற்கு

முன்னேறுகிறார். ஆசிரியர் கற்பித்தல் நடைமுறையில் பெற்ற திறன்களைப் பயன்படுத்துவதோடு அடுத்த பணி நிலைக்கான திறன்களை நோக்கி வேலைசெய்யத் தொடங்குவார்.

ஆசிரியக் கல்வித் திட்டத்தில் (*TEP*) ஒருவர் நுழைந்த முதல் நாளிலிருந்தே வெற்றிகரமான கற்பித்தல் பணிக்காலத்திற்குத் தயாராகும் பயணம் தொடங்குகிறது. கற்பித்தல் பணிக்குத் தயாராகும் போது தொடக்கக் கட்டத்தில் ஒரு மாணவ ஆசிரியர் பெற வேண்டிய திறன்களை தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் பட்டியலிடுகிறது. எனவே, ஒரு வருங்கால ஆசிரியர் கற்பித்தல் தொழிலில் சேர முடிவு செய்தால், அவர்கள் தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியக் கல்வி நிறுவனங்களில் சேரவேண்டும். கற்பித்தல் தொழிலின் முதல் பணிக்கால கட்டத்தை அடைவதற்குத் தேவையான திறன்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தில் அந்த நிறுவனம் மாணவ ஆசிரியருக்கு கல்வி கற்பிக்கும். இந்தத் தரநிலைகள் பணிக்கு முந்தைய ஆசிரியர்களுக்கான கல்வி நிறுவனங்களால் பாடத்திட்ட திட்டமிடல் மற்றும் படிப்பை வழங்குவதில் அடையவேண்டிய குறைந்தபட்சத் தரநிலைகளாக இருக்கும். மாணவ ஆசிரியர் தமது தொடக்ககால ஆசிரியர் பயிற்சியில் தொடர்பயிற்சி மற்றும் வழிகாட்டுநரின் ஆதரவு மூலம் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறையைத் திறம்பட செயல்படுத்த தேவையான அறிவு, தனித்திறன்கள், விழுமியங்கள் மற்றும் மனப்பான்மைகளை உருவாக்குவார்.

தேசியக் கல்விக் கொள்கை 2020-ன்படி, ஆசிரியத் தொழிலில் நுழைவதற்கு ஒவ்வொரு பள்ளி நிலைக்கும் ஆசிரியர் தகுதித் தேர்வு *(TET)* என்பது ஒரு மாணவ ஆசிரியருக்கு முன்நிபந்தனையாக இருக்க வேண்டும். இவ்வாறு, அத்தகைய போட்டியாளர்கள் அடையாளம் காணப்படுவதை ஆசிரியர் தகுதித் தேர்வு அளவிட்டு உறுதி செய்யும். மேலும், அவர்களின் தேர்வு விவரக்குறிப்புகள் அவர்களின் திறன்களின் அளவைக் குறிப்பனவாக இருக்கும். புதிய ஆசிரியர், கற்பித்தல் பணியில் சேர்ந்தவுடன், அவர் தேசிய ஆசிரியர் பணித் தகுதித் தரநிலைகள் அடிப்படையிலான பணிநிலைக்குத் தயாராக வழிகாட்டப்படுவார். ஆசிரியரின் திறன்கள், அந்தத் தொழிலுக்கானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டத் தரநிலைகளில் அடையும் அளவைக் குறிக்கும் செயல்திறன் குறியீடுகளால் *(PI)* மதிப்பிடப்படும். நிலைவாரியான திறன்களைப் பெறுவதற்கான குறைந்தபட்ச கால அளவு ஐந்து ஆண்டுகள் ஆகும். ஆசிரியர்களின் தர உறுதி மற்றும் செயல்திறன் குறியீடுகள் தேசிய வழிப்படுத்துதல் பணித்திட்டத்துடன் *(NMM)* இணைக்கப்படும். அத்துடன், சிறந்த ஆசிரியர்களை வழிப்படுத்து நர்கள் குழுவில் சேர்க்கலாம். இது பல்வேறு தனிநபர்களிடையே பிற துறையினரிடமிருந்து கற்றவற்றை பயன்படுத்துவதற்கான வாய்ப்பைத் தருகிறது. இது அவர்களின் தொழில்முறை வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

ஆசிரியர்கள் பெற்ற திறன்களின் அடிப்படையில் அவர்களின் மூன்று வெவ்வேறு நிலைகள் பின்வருமாறு:

### 1. திறமையான ஆசிரியர் (பிரவீண் சிக்ஷக்):

இந்தப் பணி கட்டத்தில், கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் இன்றியமையாத திறன்களை வெளிப்படுத்த ஒரு ஆசிரியர் தொழில்ரீதியாகத் தற்சார்புடையவரகளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்முறை மேம்பாட்டுத் திட்டங்களிலும் அவற்றின் நடைமுறையிலும் அவர்கள் பெற்ற அறிவை வலுப்படுத்துவதில் திறமையான ஆசிரியருக்குப் பள்ளியிலேயே உள்ள வழிகாட்டுநரின் ஆதரவு கிடைக்கும். திறமையான ஆசிரியர்கள் தங்கள் நடைமுறையை மேம்படுத்திக்கொள்ள இந்தப் பள்ளிசார் வழிகாட்டுநர்கள் உதவுவார்கள். திறமையான ஆசிரியர் தான் பெற்ற திறன்களைச் செயல்படுத்துவதில் சிறந்த செயல்திறனை அடைந்தவுடன், அவர் பணியின் அடுத்த கட்டத்திற்கு, அதாவது மேம்பட்ட ஆசிரியர் நிலைக்குத் தயாராவதற்கு வழிகாட்டப்படுவார். அடுத்த கட்டத்திற்கான தொழில்சார் மேம்பாட்டுக்கான வாய்ப்புகள் ஆசிரியருக்கு வழங்கப்படுவதுடன், அதே பள்ளிநிலையில் அடுத்த பணி கட்டத்திற்கான திறன்களைப் பெறுவதற்கும் ஆதாரங்களை வளர்த்தெடுப்பதற்கும் வழிகாட்டப்படும். ஆசிரியர், பணியின் அடுத்த கட்டத்திற்குத் தயாரானவுடன், திறன்களை மதிப்பிடுவதற்கும் மேம்பட்ட ஆசிரியர் நிலையை அடைவதற்கும் வழிகாட்டப்படும். பாடத்திட்ட உள்ளடக்கத்தை ஒழுங்கமைத்தல், வளங்களைத் தேர்ந்தெடுத்தல், பாடப் புத்தகங்களை அர்த்தமுள்ள முறையில் பயன்படுத்துதல், மாணவர்களுக்கான பாடத்திட்ட நோக்கங்களை அடைதல், மாணவர்களின் நல்வாழ்விலும் வளர்ச்சியிலும் அக்கறை மற்றும் மாணவர்களுடன் பயனுள்ள தொடர்பு ஆகியவற்றைத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் மெய்ப்பிப்பார். கற்றலின் தேவையை நிறைவேற்ற தனிப் பட்ட கற்றலின் அவசியத்தை அவர் அங்கீகரிப்பார்; உடனடி பங்குள்ளோரான பெற்றோர்கள் மற்றும் பள்ளி நிர்வாகத்துடன் தொடர்பு கொள்வார்; ஜனநாயக மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களையும் நடைமுறைகளையும் ஊக்குவிப்பார்.

### 2. மேம்பட்ட ஆசிரியர் (உன்னத் சிக்ஷக்):

பணியின் இந்தக் கட்டத்தில், ஒரு ஆசிரியர் கற்பித்தல்-கற்றல் செயல்முறை தொடர்பான சிறந்த நடைமுறை களில் அடித்தளமிட்ட கற்பித்தலின் மிக உயர்ந்த தரநிலைகளை உள்ளடக்கியவராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் இன்றியமையாத திறன்களைப் பயன்படுத்துவதில் அவர்

தொழில்முறை திறன் கொண்டவராக இருப்பார். மேம்பட்ட ஆசிரியர்கள், திறமையான ஆசிரியர்களின் ஒப்பார் குழுவுக்குத் தலைவராக இருக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள். மேம்பட்ட ஆசிரியர்களின் நடை முறைகள் முதல்வர்/தலைமையாசிரியர்/மூத்த செயல்பாட்டாளர்களால் கண்காணிக்கப்பட்டு அதற்கேற்ப அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். மேம்பட்ட ஆசிரியர் அடுத்த பணிக் கட்டத்திற்குத் தயாரானவுடன், அவர் வல்லுநர் ஆசிரியர் நிலையை அடைவதற்கு வழிகாட்டப்படும். இந்தப் பணிக் கட்டத்தில் அவர் இன்னும் பெரிய முகமைகளுக்கு விண்ணப்பிக்கவும், தகவமைக்கவும் செயல்படவும் போதுமான விழிப்புணர்வுடன் இருப்பார்; பாடப்பரப்பில் ஏற்படும் வளர்ச்சி குறித்து அறிந்திருப்பார்; திறன் ஒருங்கிணைப்புடன் பாடத்திட்ட உள்ளடக்கம் முழுவதிலும் புதிய பாடத்திட்ட உள்ளடக்கத்திற்கென பணிபுரிவார். அவர் மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் வெவ்வேறு கற்றல் தேவைகளை நிறைவேற்றும் திறன் கொண்டவராக இருப்பார்; கற்றல் மற்றும் கற்பித்தல் சூழலைப் புரிந்துகொண்டு அதைப் பிரதிபலிப் பவராக இருப்பார்; ஒப்பிட்டு, புதுமைப்படுத்தி, சிக்கல்களைத் தீர்ப்பார். அவர் உடனடி, நடுத்தர மற்றும் நீண்ட கால மாணவர் கற்றல்/கல்வி நோக்கங்களுக்கான உத்தி வளங்களைக் கொண்டவராக இருப்பார். மேலும் சவால்களை எதிர்கொள்ளவும், பள்ளியிலும் சமூகத்திலும் உள்ள பல்வேறு பங்குள்ளோருடன் பணியாற்றவும் செய்வார்.

### 3. வல்லுநர் ஆசிரியர் (குஷால் சிக்ஷக்):

இந்த மட்டத்தில், ஆசிரியர்கள் வழிகாட்டுநர் அல்லது ஒப்பார் குழுத் தலைவரின் பாத்திரத்திற்கு, விதிவிலக்கான திறனுடன் மிக உயர்ந்த தரத்தை உருவாக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மற்ற ஆசிரியர்கள் தமது திறன்களை மேம்படுத்தவும், பள்ளியின் தொழில்முறை மேம்பாட்டுத் திட்டத்தை வழிநடத்தவும் உதவுவார்கள். பணியின் இந்தக் கட்டத்தில், ஒரு ஆசிரியர் தொடர்ந்து தங்கள் கற்பித்தல் நடைமுறையில் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்துவார், ஒத்துழைப்புடன் வேலை செய்வார், தமது கற்றல் மற்றும் செயல்பாட்டை மேம்படுத்த சக ஊழியர்களை வழிப்படுத்துவார். கூடுதலாக, ஒரு வல்லுநர் ஆசிரியர் தொடர்ந்து தமது கற்றல் தேவைகளையும் அவர்களின் சக ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் கற்றல் தேவைகளையும் சிந்திப்பதன் மூலம் தனது சொந்தத் தொழில்முறை அறிவு மற்றும் நடைமுறையை வளர்க்க முற்படுவார். வல்லமை வாய்ந்த ஆசிரியர்கள் கவனமான உற்றுநோக்கலில் ஈடுபட்டு தங்கள் சொந்த கற்றலுக்கும் பிறரின் கற்றலுக்கும் பொறுப்பாவார்கள். வல்லமை ஆசிரியர் அடுத்த பணிக் கட்டத்திற்கு முன்னேற மற்றவர்களுக்கு வழிப்படுத்துவார். திறன்களைப் பெறுவதற்கும் அடுத்த பணிக் கட்டம் தொடர்பான ஆதாரங்களை உருவாக்குவதற்கும் அவர்கள் வழிநடத்தப்படுவார்கள். பள்ளிகளில் கற்றல் சமூகங்களை வளர்ப்பதன் மூலம் தனது சொந்த கற்பித்தல் நடைமுறையையும் மற்றவர்களின் கற்பித்தல் நடைமுறையையும் மேம்படுத்துவதற்கான விதிவிலக்கான திறனை அவர் வெளிப்படுத்துவார்.

## 3.3 திறன்வளர்ச்சியும் மேம்பாடும்

விவரிக்கப்பட்ட அனைத்து தொழில்முறைக் களங்களிலும் திறமையின் வளர்ச்சியும் மேம்பாடும் சாத்திய மானதும் விரும்பத்தக்கதுமாகும். இந்த வளர்ச்சியும் மேம்பாடும் அறிவு, மனப்பான்மைகள், நம்பிக்கைகள், திறன்கள், மனநிலைகள், விழுமியங்கள், கற்பித்தலின் உள்ளடக்கம்/பாடம், கற்பவர்களின் புரிதல், சமூகங்கள், கல்வியின் தத்துவ நோக்கங்கள் போன்ற கற்பித்தல் தொடர்பான அனைத்துவகை திறன்களுக்கும் பொருந்தும். பரந்த அளவில், இத்தகைய வளர்ச்சிக்கு மூன்று வழிகள் உள்ளன:

**அ) அனுபவம் -** அனுபவமும் சிந்தனையும் ஆசிரியர்கள் கற்பித்தல் நடைமுறையைப் பற்றி மேலும் புரிந்து கொள்வதற்கும், அவர்களின் அறிவை ஆழப்படுத்துவதற்கும், கோட்பாடுகளையும் நம்பிக்கைகளையும் புரிந்து கொள்வதற்கும், சூழல், கற்பவர்கள் மற்றும் கற்றல் செயல்முறையையும் அத்துடன் கல்வி நோக்கங்களைப் புரிந்துகொள்வதற்கும் வழிவகுக்கிறது. ஆரம்பத்தில், ஒரு ஆசிரியரின் கவனம், கற்பித்தல் நடைமுறைகளை நன்கு அறிந்திருப்பதிலும் பல்வேறு தொழில் மற்றும் பணியிடத் தேவைகளுக்குப் பழக்கப்படுத்தி கொள்வதிலும் இருக்கும். இது எந்தத் தொழிலுக்கும் பொதுவானது. படிப்படியாக, கற்பித்தல் மற்றும் கற்றலைச் செயல்படுத்துவதற்கும் அனைத்து மாணவர்களையும் கல்வி இலக்குகளை அடையச் செய்வதற்கான முக்கியப் பணியில் ஈடுபடுவதற்கும் மனத்திற்கு அதிக ஓய்வுநேரம் கிடைக்கிறது. பணிக்கு முந்தைய ஆசிரியக் கல்விக் காலத்தில் 'கோட்பாடு சார்' கற்றலின் முக்கியத்துவமும் மதிப்பும் வெளிப்படை யாவதுடன் ஆசிரியர்களால் மிகவும் மதிப்பிடவும்படுகிறது. ஆசிரியர்கள் தொழில்முறை அடையாளம் குறித்தும் தொழிலைப் பற்றிய புரிதல் குறித்தும் கூடுதல் உணர்வை உருவாக்குகிறார்கள் அனைத்து ஆசிரியர்களும் அனுபவத்தின் மூலம் கற்றுக் கொள்கிறார்கள், வளர்கிறார்கள்.

**ஆ) வெளிப்பாடும் ஊடாட்டமும்-** தொழில்முறைக் கற்றலின் சமூக இயல்பு இப்போது பெரிய அளவில் ஒப்புக் கொள்ளப்படுகிறது. சக நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களுடன் பேசுவதன் மூலம் கற்றலும் ‘ மற்ற இடங்களில்

எவ்வாறு அவை மேற்கொள்ளப்படுகின்றன' போன்றவற்றை அறிதலும் ஆசிரியர்களின் கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் முக்கிய ஆதாரங்களாகும். மாநாடுகளிலும் பட்டறைகளிலும் கலந்துகொள்வது, நடைமுறை மற்றும் தொழில்முறை கற்றல் சமூகங்களின் ஒரு பகுதியாக இருப்பது, மற்றும் கல்வி தவிர பிற பணியிடங்களில் நடைபெ றும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுதல் ஆகியவை ஆசிரியர்களுக்கு அவற்றைப் பற்றி சிந்திக்கவும் கற்றுக்கொள்ளவும் வாய்ப்புகளை வழங்குகின்றன.

**இ) தொடர்ச்சியான தொழில்முறை வளர்ச்சி -**தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டிற்கான இணைய வழி மற்றும் நேர்வழி பயிற்சிப்பட்டறைகள், திறன் வளர்ப்பு அமர்வுகள், திறன்மேம்பாடு படிப்புகள் ஆகியவை புது அறிவு, நடைமுறைகள் அல்லது புதிய திறன் பகுதிகள் மற்றும் திறன்களை மேம்படுத்து வதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றன. மேலும் அதனுடன் தொடர்புடைய திறன்களை வளர்த்து அதன் மூலம் புதிய பணிக்காலப் பாதைகளுக்கு வழிவகுக்கின்றன. எனவே, புதிய பரப்புகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல் மற்றும் அதிக வல்லமையை வளர்த்தல் ஆகிய இரண்டிற்கும் இது ஒரு முக்கியமான வாய்ப்பாகும்.

### 3.4 தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் (NPST)

பொதுவாக, தரநிலைகள், பயனுள்ள முறையில் கற்பித்தல் தரத்தை வரையறுக்கவும், திட்டமிடுவதற்கு மானவைகளாகவும் பார்க்கப்படுகின்றன. அவை "சிறந்த கற்பித்தலுக்கானதாக" இருப்பதுடன் "தரங்களை அடைவது" என்றால் என்ன என்பதையும் காட்டுகின்றன. தொழில்ரீதியாக, இந்தத் தரநிலைகள் அவற்றின் நோக்கம் மற்றும் பரப்பின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. இந்தத் தரநிலைகள் பொதுவான தாகவோ அல்லது நடைமுறையில் தொடர்புடைய களங்களுக்கு குறிப்பிட்டதாகவோ இருக்கலாம். இவற்றை, அனைத்து கற்பித்தல் வல்லுநர்களையும் உள்ளடக்கிய அடிப்படை முறையிலோ அல்லது திறமைநிலை முதல் வல்லுநர் பயிற்சிநிலை வரையிலான திட்டத்தை வழங்குமாறு வெவ்வேறு பணிக் கட்டங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு படிப்படியாகவோ வரையறுக்கலாம்.




படம். 2 பணித்தகுதித் தரநிலைகள் மற்றும் திறன் பற்றிய விளக்கம்

தேசியக் கல்விக் கொள்கை 2020இன் நோக்கத்தை அடைய, மேலே குறிப்பிட்டுள்ள மூன்று களங்களில் உள்ள தரநிலைகள் ஆசிரியர்களின் வாழ்நாள் முழுவதுமான பணிக்கால வளர்ச்சியை உள்ளடக்கியதாக விரிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. NCERT, SCERTகள், பல்வேறு நிலைகளிலும் பகுதிகளிலும் உள்ள ஆசிரியர்கள், ஆசிரியர் உருவாக்கத்திலும் மேம்பாட்டிலும் உள்ள வல்லுநர் நிறுவனங்கள், வல்லமை அமைப்புகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலையின் பொதுவான வழிகாட்டுத் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

# 4. தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகளுக்கான வடிவமைப்பு

தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் வடிவமைப்பின் பணிக் கட்டங்கள்சார் பரிமாணங்களை ஆசிரியர் பணியின் குறிப்பிட்ட அம்சங்களின் மூலம் விவரிக்கலாம். இந்த வடிவமைப்பானது 'தரநிலைகள்' எனப்படும் மூன்று பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. இவை ஒன்றோடொன்று சார்-தொடர்புடையவை. மேலும், கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி பல களங்களை உள்ளடக்குகின்றன.

**4.1 தரநிலை 1:** *முக்கிய விழுமியங்களும் நெறிமுறைகளும்* – இந்தத் தரநிலையானது, ஒரு ஆசிரியரிடத்தில் எதிர்பார்க்கப்படும் முக்கிய விழுமியங்கள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பான களங்களை உள்ளடக்கியதாக இருக்கும் . விழுமியங்கள் மற்றும் நெறிமுறைகள் ஆசிரியப் பணியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. உண்மையான அர்ப்பணிப்பு, தொழில்முறை திறன், நேர்மை, மரியாதை, நம்பிக்கை, மாணவர்களுடன் பரஸ்பரப் புரிதல் முதலியவையே ஆசிரியர்களின் தொழில்முறை வளர்ச்சியை வடிவமைக்கும் வழிகாட்டுக் கொள்கைகளாகச் செயல்படுகின்றன. மேலும், இவை ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் திறன்களை மேம்படுத்துவதோடு வாழ்நாள் முழுவதும் கற்றலையும் தொடர்ந்து செம்மைப்படுத்த உதவுகின்றன. இந்த அடிப்படை விழுமியங்களையும் நெறிமுறைகளையும் நிலைநிறுத்துவதன் மூலம், ஆசிரியர்கள் சமத்துவம் மற்றும் ஒப்புரவுள்ள கல்வி முறைமைக்கான அடித்தளத்தை உருவாக்குகிறார்கள்.




படம். 3 முக்கிய விழுமியங்களும் நெறிமுறைகளும் விளக்கப்படம்

**4.2 தரநிலை 2:** *அறிவும் பயிற்சியும்* – ஒவ்வொரு தொழில்பணி நிலையிலும் திறம்படச் செயல்படும் வகையில், தங்கள் மாணவர்களைப் பற்றியும், கற்றல்- கற்பித்தலைப் பற்றியும் ஒரு ஆசிரியர் தெரிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் வேண்டும் என்று எதிர்பார்க்கும் களத்தினை இந்தத் தரநிலை உள்ளடக்கி யுள்ளது. கற்பித்தல்-கற்றல் செயல்முறை மற்றும் கற்றல் மதிப்பீட்டை மேற்கொள்ளும்போது, குழந்தை களுக்கான சரியான கற்றல் அனுபவங்களை ஆசிரியர் எவ்வாறு வடிவமைக்கிறார் என்பதையும் இத்தரநிலை குறித்துக்காட்டுகிறது. ஆசிரியரின் அறிவுத்திறன் மற்றும் பயிற்சியின் களமானது, பாட அறிவு மற்றும் தொடர்புடைய கற்பித்தல், உள்ளடக்க அறிவு, பாடத்தை வழங்குவதற்கான வழிகள், கல்வி நோக்கங்கள் மற்றும் தேசிய கல்வி முறைகள், கொள்கைகள் மற்றும் வரலாறு, கற்றல் கோட்பாடு பற்றிய அறிவு மற்றும் கற்பவரின் சூழல் குறிப்பிட்ட அறிவு, கல்வி நடைமுறை பற்றிய அறிவு ஆகியவற்றை உள்ளடக்கிய பரந்த பரப்பை உடையது. அறிவும் பயிற்சியும், செயல்பாடுகளை நிகழ்த்தும் திறன்கள் மற்றும் மனப்பான்மை களையும் உள்ளடக்கியது. மேலும், பின்வரும் தாக்கம் செலுத்தும் கூறைக் கொண்டிருப்பது ஆகும்: மாணவர் களை ஒப்புரவுடனும் அர்த்தமுள்ள வகையிலும் ஈடுபடுத்துதல், திட்டமிடுதல், கற்பித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் சிந்தித்தல், வளங்களைத் தேர்ந்தெடுத்தல், மேம்படுத்துதல் மற்றும் பயன்படுத்துதல், கற்றலை வடிவமைத்தல் மற்றும் செயல்படுத்துதல். வகுப்பறை, நூலகம், ஆய்வகம், 'களப் பயணங்கள்', தாழ்வாரங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் உள்ளிட்ட பல்வேறு பாடத்திட்ட தளங்களில் உள்ள அனுபவங்கள், அனைத்து மாணவர்களையும் கற்கவும் முழுமையாக மேம்படுத்தவும் உதவுதல் ஆகியனவாகும்.




படம். 4 அறிவும் பயிற்சியும் பற்றிய விளக்கம்

**4.3 தரநிலை 3:** **தொழில்முறை வளர்ச்சியும் மேம்பாடும்** – தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டிற்கான (*CPD*) திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் ஒவ்வொரு பணிநிலையிலும் தொழில்முறை அறிவு/திறன் மற்றும் பயிற்சியை மேம்படுத்த ஒரு ஆசிரியரிடம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பது தொடர்பான களத்தை இந்தத் தரநிலை உள்ளடக்கியுள்ளது. ஆசிரியர்கள் வல்லுநர்களாகத் தங்கள் தொழில்முறை அடையாளத்தை மதிக்க வேண்டும் மற்றும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு தங்கள் திறன்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். இந்த ஆவணத்தில் பயன்படுத்தப்படும் திறன் என்பதற்கான செயல்பாட்டு வரையறையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ள படி, திறன் என்பது அனைத்து வகையான அறிவு, மனவியல்புகள் மற்றும் ஆற்றல் களை உள்ளடக்கியதாகும்.




படம். 5 தொழில்முறை வளர்ச்சி மற்றும் மேம்பாடு பற்றிய விளக்கம்

| தரநிலை 1: முக்கிய விழுமியங்களும் நெறிமுறைகளும் | | | |
|---|---|---|---|
| ஒரு ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் அடிப்படை விழுமியங்கள் மற்றும் தொழில்முறை நெறிமுறைகள் | | | |
| **களம்** | **திறன்மிகு ஆசிரியர்** | **மேம்பட்ட ஆசிரியர்** | **நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்** |
| இந்திய அரசியலமைப்பில் பதிவுச் செய்யப்பட்டுள்ள அரசியலமைப்பு விழுமியங்கள் | பகுத்தறிவுத் திறன், முன்னுரிமைகள், இந்திய அரசியலமைப்பு விழுமியங்களை மேற்கோளுடன் குறிப்பிடும் திறன் மற்றும் நடைமுறைப்படுத்தும் திறன் | | |
| | தகவல்களைப் பொறுப்புடனும் நெறிமுறையுடனும் கையாளும் திறன், மாணவர்களின் கண்ணியத்தை உறுதிசெய்யும் திறன். | | |
| | இந்திய அரசியலமைப்பின் பிரிவு 51A இல் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படைக் கடமை குறித்த விழிப்புணர்வும் நடைமுறைப் படுத்துதலும் | | |
| | சட்டக் கடமைகள், விதிகள், ஒழுங்குமுறைகள், கொள்கைகள் மற்றும் முரண்பட்ட சூழ்நிலையில் தார்மீக காரணங்களைப் புரிந்துகொள்வது மற்றும் சிக்கலான சூழல்களில் பேச்சுவார்த்தை நடத்தும் திறன் | | |
| தொழிற்சார் உறவுகள் | மாணவர்களுக்கு இணை பாடத்திட்ட வாய்ப்புகளை உருவாக்க துறை வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளுதல் | | |
| | குழந்தையின் முழுமையான முன்னேற்றத்தில் பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் பங்கை அங்கீகரித்தல் மற்றும் புரிந்து கொள்ளுதல் | | |
| | பள்ளி, கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூகம் இவற்றுக்கிடையே தரவுகளைப் பகிர்ந்து கொள்வதற்கான பரஸ்பர நல்லுறவைப் பராமரிக்கும் திறன் | | |
| | பள்ளிக்கு உள்ளும் புறமும் உள்ள பலவிதமான தரவு வழங்குநர் களுடன் சிக்கலான மற்றும் சவாலான சூழல்களில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், உறவுகளை மேம்படுத்து வதற்குமான திறனைப் பெற்றிருத்தல். | | |
| | அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிய கல்வி இலக்குகளை அடைவதற்கும், பள்ளியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் உகந்த பணிச்சூழல் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும் நிறுவனம் திறம்பட இயங்குவதற்கான இலக்குகள் மற்றும் உத்திகளை அமைக்கும் திறன் கொண்டிருத்தல் | | |

| தரநிலை 2: அறிவும் பயிற்சியும் | | | | |
|---|---|---|---|---|
| வகுப்பறையில் பயனுள்ள கற்பித்தல் நடைமுறைகளின் அடிப்படையில் ஒரு ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் அறிதிறன், புரிதல் மற்றும் இயக்கம் | | | | |
| **களம்** | **இணைக் களம்** | **திறன்மிகு ஆசிரியர்** | **மேம்பட்ட ஆசிரியர்** | **நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்** |
| ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட திறன்களை அங்கீகரிப்பது, அடையாளம் காண்பது மற்றும் வளர்ப்பது | குழந்தையின் வளர்ச்சி மற்றும் கற்றலின் தாக்கம் | வளர்ச்சியின் பல்வேறு நிலைகள் மற்றும் பகுதிகள் தொடர்பான கோட்பாடுகளைப் புரிந்துகொள்வது (அறிதிறன், மொழி, சமூகம், உணர்ச்சி மற்றும் உடல்) | தனிநபர்களின் கற்றல் மற்றும் வளர்ச்சியின் வடிவங்களை அடையாளம் காண குழந்தை வளர்ச்சியின் அறிவு மற்றும் புரிதலைப் பயன்படுத்துதல் | சகாக்களுக்கான குழந்தை வளர்ச்சிக் கோட்பாடுகளின் மாதிரி பயன்பாடு |
| | கற்பவரின் பன்முகத்தன்மை | பல்வேறு வகை மாணவர் பன்முகத் தன்மைகள் (கற்றல் முறைகள், கற்றல் தேவைகள், சமூக-பொருளாதார நிலை, கலாச்சாரம், மொழி, குடும்ப அமைப்பு போன்றவை) பற்றிய தெளிவான புரிதலை வளர்த்து, பள்ளி மற்றும் வகுப்பறையில் இந்தப் பன்முகத் தன்மையை குறிப்பிட்டு நிறுவுதல் | மாணவர்களின் மாறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்யவும், அனைவரையும் உள்ளடக்கிய வகுப்பறையை உருவாக்கவும் கற்றல் வளங்களின் அறிவைப் பயன்படுத்துதல் | வகுப்பறை அனுபவத்தின் அடிப்படையில் தனிப்பட்ட மாணவர்களின் பல்வேறு தேவைகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்யும் திறன் |
| | மாற்றுத்திறனாளி மாணவர்கள் மற்றும் மீத்திற மாணவர்களின் கற்றல் தேவைகள் | பல்வேறு வகையான உடற்குறைகள் மற்றும் அவர்களின் சிறப்பு கற்றல் தேவைகள் பற்றியும் மீத்திற மாணவர்களின் கற்றல் தேவைகள் பற்றிய விளக்கத்தையும் தந்து அவர்களின் | வகுப்பில் உள்ள பல்வேறு மாணவர்களின் தேவைகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்ய சிறப்புத் தேவைகள் பற்றிய அறிவைப் பெற்றிருத்தல் | நிபுணரின் தலையீடு தேவைப்படும் சிறப்புத் தேவைகளைக் கண்டறிந்து, அத்தகைய சூழ்நிலைகளை எவ்வாறு அணுகுவது என்பது குறித்த உள்ளீடுகளை சக |

| தரநிலை 2: அறிவும் பயிற்சியும் | | | | |
|---|---|---|---|---|
| வகுப்பறையில் பயனுள்ள கற்பித்தல் நடைமுறைகளின் அடிப்படையில் ஒரு ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் அறிதிறன், புரிதல் மற்றும் இயக்கம் | | | | |
| **களம்** | **இணைக் களம்** | **திறன்மிகு ஆசிரியர்** | **மேம்பட்ட ஆசிரியர்** | **நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்** |
| | | கற்றலுக்கு ஆதரவாக செயல்திட்டம் உருவாக்குதல். | | நண்பர்களுக்கு வழங்கும் திறன் |
| அறிவு, கருத்தியல் ரீதியான புரிதல் மற்றும் பாடப் பயன்பாட்டு நிலை | | அறிவைப் பரப்புதலில் உள்ள வெளிப்படுத்தும் திறனில் வல்லமை, பாடம்சார் செயற்களத்தின் புரிதல் மற்றும் பயன்பாட்டுநிலை | பாடத்திற்குள் மற்றும் பாடங்களுக்கிடையே உள்ளடக்க இணைவுகளின் பயன்பாடு மற்றும் உள்ளூர் மற்றும் மரபுசார் அறிவுப் பயன்பாடு | துறைசார் களங்களில் மேம்பாட்டுடன் இன்றுவரைப் புதுப்பித்தலைப் பெற்றிருத்தல் மற்றும் புதிய கருத்துக்களை பாடத்திட்டத் தொடர்புபடுத்தலில் வருவித்தல் |
| கலைத்திட்டம் | கலைத்திட்ட வடிவமைப்பு | கலைத்திட்டத்தின் இலக்குசார் தெளிவான புரிதலை மற்றும் பாடம்/துறையில் பாடத்திட்ட இணைச்செயல்களை மேம்படுத்தல் | பாடத்திற்குள், பாடங்களுக்கு இடையே இணைப்புகளை மேம்படுத்தவும் புரிந்துகொள்ளவும் சகப்பணியாளர்களுடன் இணைந்து செயல்படுதல் | அண்மைக்கால ஆக்கங்களையும் புதிய அறிவையும் கருத்தில் கொண்டு கலைத்திட்ட மாற்றம் |
| மாணவர் கற்றலுக்கான உள்ளடக்க மேம்பாடு | அறிவுறுத்தல் / பயிற்றுமுறை நெறிகள் மற்றும் கற்றல் வகைப்பாட்டியல் | பொது அறிவுறுத்தல் நெறிகளைப் புரிந்துகொள்ளல், கற்பித்தலில் பயன்படுத்தப்படுகிற கற்றல் வகைப் பாட்டியல்கள் மற்றும் பொது பயிற்று நெறி முறைகள் மற்றும் வளங்கள் | தன் சொந்த /கற்பிக்கும் பாடத்தில் கற்பித்தல் வகைப்பாட்டியலையும் கல்வியியல்சார் உத்திகளையும் பயன்படுத்தி வளர்ச்சிக்கேற்ற பொருத்தமான கற்றல் இலக்குகள்/ விளைவுகளை உருவாக்க வேண்டும். | கற்றல் கோட்பாடுகள், அறிவுறுத்தல் கற்பித்தல் உத்திகள் மற்றும் ஈர்க்கும் பாடத் திட்டங்களை உருவாக்க கற்றல் வகைபிரித்தல்களைப் பயன்படுத்த சக ஊழியர்களை வழிப்படுத்துதல் |

| தரநிலை 2: அறிவும் பயிற்சியும் | | | | |
|---|---|---|---|---|
| வகுப்பறையில் பயனுள்ள கற்பித்தல் நடைமுறைகளின் அடிப்படையில் ஒரு ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் அறிதிறன், புரிதல் மற்றும் இயக்கம் | | | | |
| களம் | இணைக் களம் | திறன்மிகு ஆசிரியர் | மேம்பட்ட ஆசிரியர் | நிபுணத்துவம் மிக்க ஆசிரியர் |
| | வேறுபட்ட அறிவுறுத்தல் / கற்பித்தல் | வேறுபட்ட அறிவுறுத்தல் / கற்பித்தல் உத்திகள், கற்றலில் மாணவர்களின் பங்களிப்பை மேம்படுத்துவதின் பங்கு பற்றிய தெளிவான புரிதலை வெளிப்படுத்துதல் | மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்த மாறுபட்ட கற்றல் முறைகளைப் பயன்படுத்துவது | மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்க, வளர்ச்சியை பொருத்து மாறுபட்ட செயல்பாடுகள், உத்திகள் ஆகியவற்றை உருவாக்குவதில் சக ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல். |
| | திறனாய்வு சிந்தனை, ஆக்கப்பூர்வமான சிந்தனை மற்றும் உயர்நிலை சிந்தனை திறன் போன்ற வாழ்க்கைத் திறன்களை வளர்ப்பதற்கான உத்திகள் மற்றும் கருவிகள் | திறனாய்வு மற்றும் ஆக்கப்பூர்வமான சிந்தனை மற்றும்/ அல்லது பிற உயர்நிலை சிந்தனை திறன்களை வளர்க்கும் பொதுவான கல்வியியல் உத்திகள் பற்றிய ஆழமான புரிதலை வெளிப்படுத்துதல் | அத்தகைய திறன்களை வளர்ப்பதற்கு பொருத்தமான கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்துதல் | இந்தத் துறையில் சமீபத்திய முன்னேற்றங்கள் அடிப்படையில் புதிய கற்பித்தல் உத்திகளை உருவாக்குதல் |
| கற்றல் திட்டங்கள் | கற்றல் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் | அளவிடக்கூடிய மற்றும் அடையக்கூடிய கற்றல் இலக்கு மற்றும் குறிக்கோள் பற்றிய புரிதல் | பாடத்திட்ட அமைப்புடன் கட்டமைக்கப் பட்ட பாடத்திற்கான அளவிடக்கூடிய மற்றும் அடையக்கூடிய கற்றல் இலக்குகள் மற்றும் நோக்கங்களை உருவாக்குதல் | அதிக எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தும் திறன் மற்றும் சவாலான ஆனால் அடையக்கூடிய இலக்குகளை உருவாக்குதல், மாணவர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் அவர்களின் முழுமையான |

| தரநிலை 2: அறிவும் பயிற்சியும் | | | | |
|---|---|---|---|---|
| வகுப்பறையில் பயனுள்ள கற்பித்தல் நடைமுறைகளின் அடிப்படையில் ஒரு ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் அறிதிறன், புரிதல் மற்றும் இயக்கம் | | | | |
| களம் | இணைக் களம் | திறன்மிகு ஆசிரியர் | மேம்பட்ட ஆசிரியர் | நிபுணத்துவம் மிக்க ஆசிரியர் |
| | | | | வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளுதல் |
| | கற்றல் அனுபவங்களைத் திட்டமிடுதல் | ஒரு குறிப்பிட்ட கற்றல் நோக்கத்திற்காக கற்றல் திட்டத்தை உருவாக்கும் திறன் | கற்பவரின் தனிப்பட்ட தேவையை உள்ளடக்கிய வேறுபட்ட கற்றல் திட்டங்களை உருவாக்குதல் | பாடத்திட்டத்தின் அடிப்படையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கற்றல் திட்டங்களை உருவாக்குவதற்கான திறன் |
| கற்றல் மதிப்பீடு, கற்றலுக்கான மதிப்பீடு மற்றும் மதிப்பிடுவதே கற்றலாக | மதிப்பீட்டு உத்திகள் | பல்வேறு வகைப்பட்ட மதிப்பீட்டு உத்திகளையும் கருவிகளையும் புரிந்துகொள்ளுதல் | மாணவர்களின் கற்றல் தேவையின் அடிப்படையில் பொருத்தமான மதிப்பீட்டு உத்திகளைத் தேர்ந்தெடுதல் | மாநில மற்றும் தேசிய அளவில், நிறுவனங்களின் மதிப்பீட்டுக் கொள்கையைப் பற்றிய அறிவினை வெளிப்படுத்துதல் |
| | மதிப்பீட்டுத் தரவுகள் | மாணவர்களின் மதிப்பீட்டுத் தரவுகளிலிருந்து நுண்ணறிவுகளைப் பெறுதல் | இலக்குகளை அமைக்கவும் கற்றல் திட்டங்களை உருவாக்கவும் மதிப்பீட்டுத் தரவுகளைப் பயன்படுத்துதல் | மாணவர்களைப் பற்றிய ஒருங்கிணைந்த பார்வையை உருவாக்க/ வகுப்பறை செயல்பாடுகளுக்கு வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து பெற்ற தரவுகளைப் பயன்படுத்துதல் மற்றும் பொருத்தமான தீர்வுகளின் வழி கற்றலுக்கு உதவுதல் |

| தரநிலை 2: அறிவும் பயிற்சியும் | | | | |
|---|---|---|---|---|
| வகுப்பறையில் பயனுள்ள கற்பித்தல் நடைமுறைகளின் அடிப்படையில் ஒரு ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் அறிதிறன், புரிதல் மற்றும் இயக்கம் | | | | |
| களம் | இணைக் களம் | திறன்மிகு ஆசிரியர் | மேம்பட்ட ஆசிரியர் | நிபுணத்துவம் மிக்க ஆசிரியர் |
| | தகவல் பரிமாற்றமும் பின்னூட்டமும் | மாணவர்களின் செயல்பாட்டுத் தரவுகளை மாணவர்களோடும் பெற்றோர்களோடும் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் முன்னேற்றத்திற்கு பின்னூட்டங்களை வழங்குதல் | மாணவர்களின் வகுப்பறை செயல்பாடுகள் குறித்துத் தனித்துவமான பின்னூட்டங்களை மாணவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் ஆகியோரிடம் பகிர்ந்து கொள்ளல். | மாணவர்களின் கற்றல் வழிகாட்டலுக்கு பெற்றோர்கள், சமூக உறுப்பினர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்தல் |
| கல்வியில் தொழில்நுட்பப் பயன் பாடும் ஒருங்கிணைவும் | | கல்வியில் தொழில்நுட்பத்தின் பங்கினைப் புரிந்துகொள்ளுதல் | கற்றல் கற்பித்தல், மதிப்பீடு, வகுப்பறை நிர்வாகம் ஆகியவற்றுக்கு உதவும் வகையில் ICT கருவிகளைப் பயன்படுத்துதலுல் | தனக்காகவும் உடன் பணிபுரிபவர் களுக்கும் உதவுவதற்காகப் பொருத்தமான தொழில்நுட்பக் கருவிகளை உருவாக்குதல் |
| வகுப்பறை கூறுகளும் செயல்பாடுகளும் | பாதுகாப்பு, பயிற்றுவிப்பு மற்றும் கற்றலுக்கான துணைச் சூழல் | பாதுகாப்பானதும் ஒருங்கிணைந்ததுமான வகுப்பறையை உருவாக்குவதற்கு வசதிகளையும் வளங்களையும் ஒருங்கிணைத்தல் | அச்சமற்று தங்களின் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள மாணவர்களை ஊக்குவித்தல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த ஆதரவான கற்றல் சூழலை உருவாக்குதல் | பாதுகாப்பான ஒருங்கிணைந்த வகுப்பறை உருவாக்கத்தில் மாணவர்கள் பங்கெடுத்தல் |
| | வகுப்பறை நிர்வாகம் | வகுப்பறை நிர்வாகத்திற்கான அறிவினை விளக்குதல் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் திறன் | மாணவர்களின் நடத்தையில் பன்முகத்தன்மையைப் புரிந்து கொள்ளலும் அமைத்தலும் | மாணவர்களிடத்தில் சுய ஒழுக்கம், பொறுப்புணர்வு மற்றும் தலைமை உணர்வை மேம்படுத்தல் (முன் மாதிரி) |

| தரநிலை 2: அறிவும் பயிற்சியும் | | | | |
|---|---|---|---|---|
| வகுப்பறையில் பயனுள்ள கற்பித்தல் நடைமுறைகளின் அடிப்படையில் ஒரு ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் அறிதிறன், புரிதல் மற்றும் இயக்கம் | | | | |
| களம் | இணைக் களம் | திறன்மிகு ஆசிரியர் | மேம்பட்ட ஆசிரியர் | நிபுணத்துவம் மிக்க ஆசிரியர் |
| | செயலூக்கமுடைய வகுப்பறை உரையாடல்கள் | வகுப்பறை கலந்துரையாடலில் பல்வேறுபட்ட வாய்மொழிவழிக் கருத்துப்பரிமாற்றம் வாய்மொழியற்ற கருத்துப்பரிமாற்ற புரிந்துகொள்ளலை அடையும் திறன் | கற்றல் பங்கேற்பை உருவாக்குவதற்கு பல்வேறுபட்ட உரையாடல் உத்திகளான வாய்மொழிவழிக் கருத்துப் பரிமாற்றம் மற்றும் வாய்மொழியற்ற கருத்துப் பரிமாற்றங்களைப் பயன்படுத்தலும் பதிலளித்தலும் | சக பணியாளர்கள் தங்களின் வகுப்பறை கருத்துப் பரிமாற்றத்தை வளப்படுத்திக் கொள்வதற்கு ஆக்கப்பூர்வமான பின்னூட்டங்களை வழங்குதல் |
| | மொழியின் பன்முகத்தன்மை மற்றம் பன்மொழிக் கொள்கை | மொழி பன்முகத்தன்மை மற்றும் தொடர்புடைய மொழிகளில் புலமை ஆகியவற்றைப் பொருட்படுத்தாது அனைத்துக் குழந்தைகளையும் உள்ளடக்கிய தன்மையை வெளிப்படுத்தல். | வகுப்பில் கற்றல் கற்பித்தலை எளிமையாக்கப் பன்மொழியை பயன்படுத்தும் சக பணியாளர்களை ஆதரித்தல். | சக பணியாளர்களிடத்தில் கற்றல் மற்றும் கற்பித்தலை எளிமையாக்கப் பன்மொழிப் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தல் |

| தரநிலை 3 : தொழில்முறை வளர்ச்சியும் மேம்பாடும் | | | |
|---|---|---|---|
| தொழில்முறை பயிற்சியில் மேம்படுத்தவும் வளர்ப்பதற்குமான திறன் | | | |
| களம் | திறன்மிகு ஆசிரியர் | மேம்பட்ட ஆசிரியர் | நிபுணத்துவம் மிக்க ஆசிரியர் |
| கற்றல் தேவைகள் | கற்றல் தேவைகளை அடையாளம் காணல் மற்றும் தன்னுடைய பணி மேம்பாட்டிற்கான இலக்குகளை நிறுவுதல் | பங்குள்ளோரிடம் பெறப்பட்ட உள்ளீடுகளின் அடிப்படையில் பணி மேம்பாட்டிற்கான திட்டங்களை வகுத்தல் | உடன்பணியாற்று வோர்களின் பணி மேம்பாட்டிற்கான வாய்ப்புகளைத் திட்டமிடலும் வழங்குதலும் |
| நடைமுறை சிந்தனை | நடைமுறை சிந்தனையை புரிந்து கொள்வதை வெளிப்படுத்துதல் | தன்னுடைய கற்பித்தல் பயிற்சியை திருத்தியமைப்பதற்குப் பயிற்சி வெளிப்பாடுகளைப் பயன்படுத்துதல் | உடன் பணியாற்றுவோரைக் கற்றல் வெளிப்பாட்டில் உள்ளடக்குவதற்கு உதவுதல்/ தயார்படுத்தல் |
| கற்றல் குழுவில் ஈடுபாடு மற்றும் பங்கெடுத்தல் | பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் கற்றல் வாய்ப்புகளில் பங்கேற்றல் | ஆலோசனை கூட்டம், கருத்தரங்கு, வலையரங்கு போன்றவற்றில் கற்றவற்றையும் ஆய்வுகளையும் வழங்குதல் | பள்ளிக்குள் கற்றல் குழுக்களைத் தொடங்குதல் மற்றும் பணிமேம்பாட்டு அமர்வுகளை ஒருங்கிணைத்தல் |

# 5. செயற்படுத்துகை

ஆசிரியர் தரத்திற்கான தேசியக் கழகம் (NCTQ) என்பது ஒரு டிஜிட்டல் தளமாகும். தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள அது, ஆசிரியக் களஞ்சியமாக இருப்பதுடன் தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகளின் செயலாக்கத்திற்கான பொறுப்பாகவும் இருக்கும். மேலும், பல அறிஞர்கள்/முகமைகளை உருவாக்க பங்குள்ளோரின்/செயல்படுத்தும் நிறுவனங்களின் திறன் வளர்ச்சி பயிற்சிகள் மேற்கொள்ளப்படும். தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் வழிகாட்டு ஆவணத்தின் செயல்படுத்தமும் தாக்க மதிப்பீடும் நாடு முழுவதும் 1175 ஆசிரியர்களிடம் நடுவணரசுக்கு உரிய 75 பள்ளிகளில் (25KVS + 25NVS + 25 CBSE) மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இக்குறுகியகாலத் திட்டம் கீழே குறிப்பிட்டுள்ள நோக்கங்களை அடைந்திருக்கிறது.

- ஆசிரியர்களின் திறன்நிலை மற்றும் பணிநிலையைக் கண்டறிதல்
- ஆசிரியரின் திறன்/திறமைகள் மற்றும் கற்பித்தல் பயிற்சிகளில் முன்னோடியான தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகளின் தாக்கத்தை அளவிடுதல்
- NPST திட்டத்தை செயல்படுத்துதல் பற்றிய பங்குள்ளோரின் பின்னூட்டங்களைச் சேகரித்தல்

## 5.1 செயல்திட்டம்

ஆசிரியர்கள் தங்களின் திறன்களை மேம்படுத்திக்கொள்ள ஆசிரியர்களின் தரத்தை குறிப்பிட்டு காட்டுவதற்கும் வளர்ச்சி பாதையைக் குறிப்பிடுவதற்கும் தெளிவாக வரையறுக்கப்பட்ட தரநிலைகளின்வழி முற்றிலுமாகக் கல்வி முறையை மாற்றுவதற்கான ஆற்றலை தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் கொண்டுள்ளது. இந்தச் செயல்படு திட்டம் கருத்துருவடிவிலான நிலையில் உள்ளது. மேலும், குறிப்பிட்ட வரம்பிற்குள் தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் முன்னோட்டத்தின்போது சோதிக்கப்பட்டுள்ளது. இதைச் செயல்படுத்துவதற்கான வழிகள் பின்வரும் படிநிலைகளைக் கொண்டுள்ளது :

- இலக்கு குழுவினரைப் பதிவு செய்தல்
- தரநிலைகளைப் பயன்படுத்தி - ஆசிரியர்களின் பணிநிலையைக் கண்டறிதல்
- தரநிலை மதிப்பீடு

தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகளின்படி, ஆசிரியர்கள் தங்களின் திறனையும் தகுதியையும் கற்பித்தலின் வழியாக மேம்படுத்திக் கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் தன்மதிப்பீட்டுக் கருவிகள் மற்றும் பிற மதிப்பீட்டுக் கருவிகள் வழியாகத் தங்களின் தகுதிகளைக் குறித்துக்காட்ட முடியும். இம்மதிப்பீட்டு முறைமை ஆசிரியர் தகுதி சான்றுகளை மேம்படுத்துவதாகவும் கற்பித்தல் வினையாற்றுகைக்குச் சான்றாகவும் வகுப்பறையின் செயல் விளக்கமாவும் பங்குள்ளோரின் பின்னூட்டங்களைக் கொண்டதாகவும் ($360^0$ பரந்த நிலையில்) மற்றும்/அல்லது சரிநிலையாளர் & வழிப்படுத்துநரிடமிருந்து உற்றுநோக்கல் அறிக்கைகளைப் பெறுவதாகவும் இருக்கும். கட்டமைக்கப்பட்ட செயல்திறன் குறிப்பானைகள் (PI) உள்ளடக்கிய தேர்வு/மதிப்பீட்டிற்கான பலவற்றைக் கொண்ட இந்தக் கருவிகள்/செயற்பொருள் அலகு 6 இல் தரப்பட்டுள்ளபடி பரிந்துரைந்துரைக்கப்பட்ட மதிப்பீட்டு ஆதாரக்கட்டமைப்பின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டதாக இருக்கலாம்.

தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகளின் (NPST) அமலாக்கச் செயல்திட்டம் பின்வருமாறு:

அ) தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் வழிகாட்டு ஆவணத்தின் வெளியீடு மற்றும் அவற்றைச் செயல்படுத்தும் பொறுப்புள்ள நிறுவனங்கள்/முகமைகளின் திறன்மேம்பாடு.

ஆ) வழிகாட்டு ஆவணத்தை மாநில/ஒன்றிய ஆட்சிப்பகுதிகள் ஏற்றல்.

இ) தேசியக் கல்விக் கொள்கை 2020இன் பத்தி 5.20-இல் திட்டமிட்டுள்ளபடி தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் உடனான ஆசிரியர் பணி மேம்பாடு, திறன் மேம்பாடு, பயிற்சி மற்றும் பிறவற்றின் ஒருங்கிணைப்பு.

ஈ) வளங்கள்/பாடப்பொருட்கள்/தன் மேம்பாடு – வளர்ச்சி வழிகாட்டி போன்ற ஆசிரியர்கள் தங்களின் திறன்களை அடைய உதவுவதற்கான மதிப்பீட்டுக் கருவிகளை உருவாக்கல்.

## 5.2 பயன்படுதன்மை

அ) பொருத்தமான மாநிலம்/யூனியன் பிரதேசங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தனித்த அமைப்பினால் தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் செயல்படுத்தப்படும். மேலும், இதைப் போலவே, நடுவண் அரசின்கீழ் உள்ள நிறுவனங்கள்/பணிக்குழுமம் வாயிலாகவும் இவைகள் செயல்படுத்தப் படும்.

ஆ) உரிய (மத்திய/மாநில அரசால்) நியமிக்கப்பட்ட தனித்த அமைப்பு விரிவான வழிமுறைகளை ஒழுங்கமைக்கும். மேலும், தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் வழிகாட்டி ஆவணத்தால் ஆசிரியர் பயிற்சித் திறன் மற்றும் பணி மேம்பாடுகளுக்குச் செயலாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பிற்கான அறிவுறுத்தல்களை வகுக்கும்.

இ) தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகளுடன் (NPST) தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம் (NCTE) அணுக்கமாகச் செயலாற்றுவதற்கு ஒருங்கிணைப்பு அதிகாரியை உரிய அரசாங்கம் நியமிக்கும்.

ஈ) தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம் (NCTE) ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கான சந்திப்புகள்/பயிலரங்கங்களை ஒருங்கிணைக்கும்.

உ) ஒவ்வொரு நியமிக்கப்பட்ட பணிக்குழுமமும் தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகளின் செயல்படுத்தத்திற்கான பொறுப்பாக இருந்து தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்துடன் தகவல் களைப் பகிர்ந்து கொள்ளும்.

ஊ) தரவுத் தளங்களை நிர்வகிப்பதாகவும், வல்லுநர்களின் களஞ்சியமாகவும் தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம் இருக்கும். இவற்றுடன் கருவிகள் முதலிய வளங்களை நியமிக்கப்பட்ட அரசாங்கம்/ பணிக்குழுமத்துடன் இது பகிர்ந்து கொள்ளும்.

எ) நாடு முழுவதும், தேசியக் கல்விக் கொள்கை 2020இன் பத்தி 5.20-இல் திட்டமிட்டுள்ளபடி ஆசிரியர் பணி மேம்பாடு திறன் மேம்பாட்டுடன் தேசிய ஆசிரியர் பணித்தகுதித் தரநிலைகள் ஒருங்கிணைக்கப்படும்.

## 5.3 பருவ மறுசீராய்வு

தொழில்முறை தரநிலைகள், தரநிலைகளின் செயல்திறன் குறித்த கடுமையான அனுபவ பகுப்பாய்வின் அடிப்படையில் அவ்வப்போது மறுஆய்வு செய்யப்பட்டு திருத்தப்படும்.

# 6. *NPST* வடிவமைப்பின் அடிப்படையிலான மதிப்பீட்டுக் கருவிகள் (பரிந்துரை)

## தரநிலை 1: முக்கிய விழுமியங்களும் நெறிமுறைகளும்

| **களம் 1: இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அரசியலமைப்பின் விழுமியங்கள்** |
|---|
| **த.நி. 1.1- பகுத்தறியும் திறன், முன்னுரிமைகள், அரசியலமைப்பின் அடிப்படையில் சிந்தித்தல் மற்றும் விளக்குதல்** |
| 1.1.1. அனைத்து மாணவர்களையும் உடன் பணிபுரிபவர்களையும் மதிப்புடனும் நேர்மையுடனும் நடத்துதல்.<br><br>1.1.2. தயக்கமின்றி தங்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பகிர்ந்து கொள்வதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவதன்வழி அனைவரிடமும் ஒற்றுமையும் நல்லிணக்கமும் ஏற்படுவதை ஊக்குவித்தல். |
| **த.நி. 1.2. அறவியல் அடிப்படையிலும், பொறுப்புடனும் தகவல்களைப் பயன்படுத்தும் திறன், மற்றும் மாணவர்களின் கண்ணியத்தை உறுதிப்படுத்துதல்** |
| 1.2.1. மாணவர்களின் தகவல்களைப் பாதுகாத்தல் மற்றும் குறிப்பிட்ட காரணங்களுக்காகத் தேவைப்படுவதன்றி அதிகாரிகள் அதைப் பகிராது இருத்தல். |
| **த.நி. 1.3. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 51A யில் தரப்பட்டுள்ள அடிப்படை கடமை குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி.** |
| 1.3.1. மாணவர்களிடத்தில் நாட்டுப்பற்றையும் நமது பல்வேறு உயர்வான பாரம்பரியத்திற்காகப் பெருமைகொள்வதையும் ஊக்குவித்தலில் முழுமையாக ஈடுபடல்.<br>1.3.2. சுற்றுப்புறச் சூழலைப் பேணவும் அறிவியல் மனப்பாங்கை வளர்க்கவும் நாட்டின் வளர்ச்சியில் பங்கெடுக்கவும் மாணவர்களை ஊக்கப்படுத்துதல். |
| **த.நி. 1.4. சட்டப்பூர்வமான கடமைகள், விதிகள், ஒழுங்குமுறைகள், கொள்கைகளை அறிந்துகொள்ளும் திறன் மற்றும் முரண்பட்ட சூழலில் அறவியல் சார்ந்து பகுத்தாய்தல், சிக்கலான சூழலில் கலந்தாலோசித்தல்.** |
| 1.4.1. சொல்லப்பட்ட விதிமுறைகளை முறையாகப் பின்பற்றுதல் (பள்ளி மற்றும் நாட்டின் ஒழுங்குமுறைகள்) மேலும், அதைப் புறக்கணிப்பதாலும் மீறுவதாலும் வரும் விளைவுகளை அறிந்திருத்தல்.<br>1.4.2. மாணவர்களும் உடன் பணிபுரிபவர்களும் விதிமுறைகளைப் பின்பற்றுவதை ஊக்குவித்தல் மற்றும் ஆதரித்தல். மேலும், சிக்கல் எழும்போது அதைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு உதவுதல். |

| **களம் 2: தொழில்முறை உறவுகள்** |
|---|
| **த.நி. 2.1- கற்போருக்கான இணை பாடத்திட்ட வாய்ப்புகளைத் தொடங்குவதற்குப் பிற வல்லுநர்களிடமும் குழுக்களிடமும் இடைமுகமாக இருத்தல்.** |
| 2.1.1. மாணவர்களுக்குப் பல்வேறு கற்றல் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு பள்ளியில் உடன் பணிபுரிபவர் களுடனும் வல்லுநர்களிடமும் ஒத்துழைத்தல்.<br>2.1.2. மாணவர்களுக்கான யதார்த்தமான இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் ஒவ்வொருவரும் பாதுகாப்பாகவும் மதிப்புமிக்கவராகவும் உணரவைக்க உறுதுணையாக இருக்கும் கற்றல் பண்பாட்டினை உருவாக்குவதன் மூலம் அவ்விலக்குகளை அடைவதற்கு உதவுதல். |
| **த.நி. 2.2- குழந்தையின் முழுமையான வளர்ச்சியில் பெற்றோர்கள் & சமூகத்தின் பங்கை உணர்ந்திருத்தல் மற்றும் புரிந்து கொள்ளல்.** |
| 2.2.1. மாணவர்களுக்கு வீட்டிலும் சமூகத்திலும் கற்றலுக்கான ஆதரவு இருப்பதை உறுதிசெய்ய பெற்றோர் மற்றும் சமூகத்தோடு நம்பிக்கையான உறவுகளை உருவாக்குதல். |
| **த.நி. 2.3- சொந்தப் பள்ளி மற்றும் பிற நிறுவனங்கள், சமூகங்களுக்கிடையே வளங்கள் முதலானவற்றை பகிர்வதற்காக பரஸ்பர தொடர்புகளை நிர்வகிக்கும் திறன்.** |
| 2.3.1. மாணவர்களின் கற்றல் அனுபவங்களைச் செறிவூட்டுவதற்காகப் பிற பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களிடமும் சமூகத்திடமும் உறுதியான உறவுகளை உருவாக்குதல். |
| **த.நி. 2.4-** பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பல்வேறுபட்ட பங்கேற்பாளர்களுடன் உறவுகளை பேணி வளர்க்கும் திறன் மற்றும் சிக்கலான & சவாலான சூழல்களை கையாளும் திறன் |
| 2.4.1. உறவுகளைப் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் பேணுதல் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் விழுமியங்கள் மற்றும் அணுகுமுறைகளை அனைவருக்கும் உறுதிப்படுத்தல். |
| **த.நி. 2.5- அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிய கல்வி இலக்குகளை அடைவதற்கும், பள்ளியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் உகந்த பணிச்சூழலையும் நல்வாழ்வையும் உறுதி செய்வதற்கும், நிறுவனம் திறம்படவும் திறமையாகயும் செயல்பட இலக்குகள் மற்றும் உத்திகளை அமைக்கும் திறன்.** |
| 2.5.1. மாணவர்களுக்கான யதார்த்தமான இலக்குகளை அமைத்து, ஒவ்வொருவரும் பாதுகாப்பாகவும் மதிப்புமிக்கவர்களாகவும் உணரக்கூடிய ஆதரவான கற்றல் கலாச்சாரத்தை உருவாக்குவதன் மூலம் அவற்றை அடைய அவர்களுக்கு உதவுகிறது.<br>2.5.2. தனக்காகவும் உடன் பணிபுரிபவர்களுக்குமான பயனுள்ள வேலை சூழலுக்கான பங்களிப்பு. |

## தரநிலை 2: அறிவும் பயிற்சியும்

| களம் 3: கண்டுணர்தல், அடையாளம் காணல் மற்றும் ஒவ்வொரு குழந்தையின் தனித்துவமான செயல்வன்மைக்கு ஊக்கமளித்தல் | | |
|---|---|---|
| **திறமையான ஆசிரியர்** | **மேம்பாட்டு ஆசிரியர்** | **நிபுணத்துவமுடைய ஆசிரியர்** |
| **த.நி. 3.1- குழந்தை மேம்பாடும் கற்றலும்** | | |
| **வெவ்வேறு படிநிலைகளுடன் தொடர்புடைய கொள்கைகளையும் வளர்ச்சிக்கான பகுதிகளையும் புரிந்து கொள்ளுதல் (அறிவாற்றல், மொழி, சமூக, உணர்வு மற்றும் உடல்)** | **அறிவின் பயன்பாடு மற்றும் கற்றல் முறைகளை உணர்வதற்கு குழந்தையின் வளர்நிலையைப் புரிந்திருத்தல் மற்றும் தனிநபர் முன்னேற்றம்** | **சகாக்களுக்கான குழந்தை வளர்ச்சிக் கொள்கையின் மாதிரிப் பயன்பாடு** |
| 3.1.1. கற்றல் திறன் மற்றும் அடைவுத்திறன் அடிப்படையில் வகுப்பறைகளில் பல்வேறு தேவைகளை நிவர்த்தி செய்வார். | 3.1.2. மாணவர்களின் வேறுபட்ட கற்றல்நெறிகளின் தேவையை உணர்ந்து பயன்படுத்தல் மற்றும் இவ்வறிவைப் பாடத்திட்டத்திலும் கற்பித்தலிலும் சரியான முறையில் ஒருங்கிணைத்தல். | 3.1.3. மாணவர்களின் வேறுபட்ட கற்றல் நெறிகளின் தேவையை உணர்ந்து கொள்ள சகாக்களுக்கு உதவுதல் மற்றும் இவ்வறிவைப் பாடத்திட்டத்திலும் கற்பித்தலுடனும் சரியான முறையில் ஒருங்கிணைக்க உதவுதல் |
| **த.நி. 3.2- கற்போரின் பன்முகத்தன்மை** | | |
| **பல்வேறு வகைப்பட்ட பன்முகத்தன்மை கொண்ட மாணவர்கள் குறித்த (கற்றல் பாணிகள், கற்றல் தேவைகள், சமூக பொருளாதார நிலை, கலாச்சாரம், மொழி, குடும்ப அமைப்பு போன்றவை) தெளிவான புரிதலை ஏற்படுத்தி பள்ளியிலும் வகுப்பறையிலும் அது குறித்து பேசுதல்** | **மாணவர்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், ஒருங்கிணைந்த வகுப்பறையை உருவாக்குவதற்கும் கற்றல் வளங்களைப் பற்றிய அறிவைப் பயன்படுத்துதல்** | **வகுப்பறை அனுபவத்தின் அடிப்படையில் தனிப்பட்ட மாணவர்களின் பல்வேறு தேவைகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்யும் திறன்.** |
| 3.2.1. மாணவர்கள் சார்ந்த சமூகம், பண்பாடு, பாலினம், மதம் போன்றவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து மாணவர்களையும் சமமாக நடத்துதல் மற்றும் பள்ளியிலும் வகுப்பறை செயல்பாடுகளிலும் அவர்கள் ஈடுபடுவதை ஊக்குவித்தல். | 3.2.2. பல்வேறு தரவுகளை வழங்குதல் மற்றும் தன்மை எடுத்துரைப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும் சூழலுக்குத் தக்க தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்தவும் மாணவர்களை ஊக்கப்படுத்துதல். | 3.2.3. கற்பவரின் தனிப்பட்ட தேவைகளைக் கண்டறிதல் மற்றும் கற்பித்தல் கற்றல் திட்டங்களை அதற்கேற்றபடி மாற்றியமைத்தல் |

| | | |
|---|---|---|
| **த.நி. 3.3- மாற்றுத்திறனாளி மாணவர்கள் மற்றும் மீத்திற மாணவர்களின் தேவையை அறிந்து கொள்ளுதல்** | | |
